
தத் ஓம் ஸத்

ஓம் நமோ பகவதே விலக்ஷணானந்தாய :



சத்குரு ஸ்வாமி ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ (1894-1945)

# கதம்பக் களஞ்சியம்

ஸ்ரீ விலக்ஷணானந்தரின் 123ஆவது ஜெயந்தி
31-12-2017, ஞாயிற்றுக்கிழமை

தொகுப்பாசிரியர்
டாக்டர் திருமதி அனந்தகிருஷ்ணா

யோகபிரயாகா வெளியீடு

தத் ஸத்

# கதம்பக் களஞ்சியம்

தொகுப்பாசிரியர்
டாக்டர் திருமதி **அனந்தகிருஷ்ணா**

ஸ்ரீ விலக்ஷணாந்தரின் 123ஆவது ஜெயந்தி
விழாவையொட்டி பிரசுரிக்கப்பட்டது

**31-12-2017, ஞாயிற்றுக்கிழமை**

வெளியீடு
**யோகபிரயாகா**
16/12, டானியல் தெரு, ஆதம்பாக்கம், சென்னை - 600 088.
தொலைபேசி : 2245 0119   கைப்பேசி : 92821 04459

ஒளியச்சு & அச்சிட்டோர்
**பரணி கிராபிஃக்ஸ்**
இராயப்பேட்டை. சென்னை 600 014.



## ஆசிரியர் உரை

வாசகர்களுக்கு என் அன்பார்ந்த வணக்கம்.

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

சத்குரு ஸ்வாமி ஸ்ரீ விலக்ஷணானந்தரின் 123ஆம் ஜெயந்தி விழாவை ஒட்டி மறுபடியும் வாசகர்களைச் சந்திப்பதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

'கதம்ப களஞ்சியம்' என்னும் இந்நூல் சிறிது வித்தியாச மாக உள்ளது. இதில் ஸ்வாமியின் பேச்சுத் திறமை, கவித்துவம், ஒரு குருவின் அறிவுரைகள் ஆகியவை பெரிதும் சுகந்தமும் மஹத்துவமும் பெற்றதாகும்.

"கோபிநாதம்" என்னும் இரு சந்தையுடன் கூடி 200க்கு மேல் கண்ணனின் பெருமைகளை பல கோணங்களிலும் சத்குரு பாடியுள்ளார். இதனைப் படிக்கும் பொழுது நமக்கு அருமையான 'கோபிகா கீதம்' என்ற கோபியர்கள் கண்ணனை பக்தி செய்து வியாசரின் பாகவத் புராணம் பாடிய நூலைத்தான் நினைவுப்படுத்துகிறது.

அடுத்ததாக, இந்துமதத்தின் பெருமையை குறிப்பாக, அது எவ்வளவு பரந்த மனப்பான்மை உளது என்றும் எல்லா மதங்களையும் அனுசரித்து, அனைத்தும் உணர்ந்து, ஒருமையுடன் உள்ள தன்மையையும், நமது குரு இந்தியா முழுவதும் சிறிய கிராமங்களிருந்து பெரிய நகரங்கள் வரை தேச சஞ்சாரம் செய்து, இளைஞராகவுள்ள காலத்திலேயே இப்பணியை தொடங்கி, அவர் மஹா சமாதி அடையும் வரை தொடர்ந்து செய்து வந்துள்ளார்.

பிறகு, 'பிரஹ்மோபந்நியஸம்' என்னும் தலைப்பில் ஆத்ம ஞானத்தின் சிறப்பையும், அதை அடையும் மார்க்கத்தையும் பலவிதமான, நாம் புரிந்து கொள்ளக் கூடிய, எளிய உதாரணங்களினால் விரிவாக விவரித்துள்ளார்.

கடைசியாக, நாம் நம்மை அறிவதற்கு இன்றியமையாத சாதனை, அதாவது அப்பியாஸம் அல்லது தியானம் மூலமாக அடைய வேண்டும் என்றும் அதை செய்யும் முறைகளும் அதில் ஏற்படக் கூடிய தடைகளையும் அதை நீக்கும் முறைகளையும் அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

இந்தக் கதம்ப கலவை மூலம் ஆன்மிக அன்பர்கள் அதனை படித்து அப்பியாஸித்து ஒளியைப் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

**- டாக்டர் திருமதி அனந்தகிருஷ்ணா**



தத் ஸத்

**ஸ்ரீ விலக்ஷணானந்தர் அருளிச் செய்த**

## கோபீநாதம்

இவை பிலவங்க கார்த்திகை 24 (10-12-1967) அன்று ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜியின் 22ஆம் ஆண்டு குரு பூஜையின்போது வெளியிட்டது

ஓம் நமோ நாராயணாய:

ஸ்ரீ கிருஷ்ணாய வாசுதேவ பரப்பிரஹ்மணே நம:

# ஸ்ரீ விலக்ஷணானந்தர் கோபீநாதம்

1. கண்ணன்மணி வண்ணனடி கோபிமாரே - அவன்
காதைதனை யோதுகிறேன் கோபிமாரே

2. வெண்ணெயுண்ட வாயனடி கோபிமாரே - அவன்
வேதாந்த நாதனடி கோபிமாரே

3. அண்டமுண்ட வாயனடி கோபிமாரே - அவன்\
ஆனந்தக் கூத்தனடி கோபிமாரே

4. அண்டரண்ட மாகியவன் கோபிமாரே - அவன்
ஆயர்குல மாயனடி கோபிமாரே

5. பாற்கடலில் பள்ளிகொண்டான் கோபிமாரே - அவன்
பஞ்சவர்க்கு தூதுசென்றான் கோபிமாரே

6. பார்கரனக் கோருருவன் கோபிமாரே - அவன்
பஞ்சநிதி கொண்டவண்டி கோபிமாரே

7. அத்தைமகளென்று சொன்னான் கோபிமாரே - அவன்
ஆமுடையாளென்று சொன்னான் கோபிமாரே

8. முத்தர்களுக்குள்ளவண்டி கோபிமாரே – அவன்
முதறிவதானவண்டி கோபிமாரே

9. ஞானபரிபாகனடி கோபிமாரே – அவன்
ஞானியர்தலைவனடி கோபிமாரே

10. ஜானகி சபோதனடி கோபிமாரே – அவன்
சஞ்சித மறுத்தவண்டி கோபிமாரே

11. பாலுநெய்யு முண்டுவிட்டான் கோபிமாரே – அவன்
பாசாங்கு பண்ணுகின்றான் கோபிமாரே

12 ஆலமரத்தப்பனடி கோபிமாரே – அவன்
ஆலாலகண்டனடி கோபிமாரே

13 மாமுனிவர் காமனடி கோபிமாரே – அவன்
மந்திர சொருபனடி கோபிமாரே

14 சாமமறை யானவண்டி கோபிமாரே – அவன்
சக்திமயமாகி நின்றான் கோபிமாரே

15 பூனைதனைக் கூட்டிவந்தான் கோபிமாரே வெண்ணெய்
போடுமென்று சொல்லிநின்றான் கோபிமாரே

16 ஆனைதனக்கானவண்டி கோபிமாரே – அவன்
அன்பருக்குள்ளானவண்டி கோபிமாரே

17 என்மகளைத் தொட்டிழுத்தான் கோபிமாரே – அவன்
இணையில்லாவின்பனடி கோபிமாரே

18 அன்புடனே அறியென்றான் கோபிமாரே – அவன்
அதிகாரத்தோடுரைத்தான் கோபிமாரே

19 பெருக்கவழைத்தாக்குவண்டி கோபிமாரே – அவன்
பேதகமகன்றவண்டி கோபிமாரே

20 வருக்கவகை தின்றிடுவான் கோபிமாரே – அவன்
வந்தவழி வந்தவண்டி கோபிமாரே

21 அத்துவிதந் துவிதமென்றான் கோபிமாரே – அவன்
அதுவுமல்ல வென்கின்றான் கோபிமாரே



22 பொய்த்துவித மெய்த்துவிதங் கோபிமாரே – அவன்
பூரணத்துவித மென்றான் கோபிமாரே

23 எட்டுமிழைத்தவண்டி கோபிமாரே – அவன்
ஏகாந்தமானவண்டி கோபிமாரே

24 தொட்டு அழைத்தவண்டி கோபிமாரே – அவன்
தோன்றாத யோகனடி கோபிமாரே

25 நான்முகற்குத் தந்தையடி கோபிமாரே – அவன்
நாதாந்த மானவண்டி கோபிமாரே

26 ஆன்முகத்தை கார்த்தவண்டி கோபிமாரே – அவன்
ஐந்துமைந்து மானவண்டி கோபிமாரே

27 இதிகாசமானனடி கோபிமாரே – அவன்
எண்ணங்கடந்தவண்டி கோபிமாரே

28 ததிபாண்டற்குற்றவண்டி கோபிமாரே – அவன்
தானாக நின்றவண்டி கோபிமாரே

29 சித்தினிடைச் செல்கின்றான் கோபிமாரே – அவன்
சேர்த்திழுத்துக் கொள்கின்றான் கோபிமாரே

30 கைத்துவந்தால் போதுமென்றான் கோபிமாரே – அவன்
காசினியோர்க் கென்கின்றான் கோபிமாரே

31 மாயை கடந்தவண்டி கோபிமாரே – அவன்
மாயை யுடையவண்டி கோபிமாரே

32 பாயலரவனடி கோபிமாரே – அவன்
பற்றும் பரமனடி கோபிமாரே

33 மூலமென்ற ஜோதியடி கோபிமாரே – அவன்
மும்மூர்த்தி நாதனடி கோபிமாரே

34 நாலுமைந்து மைந்தறிந்தான் கோபிமாரே – அவன்
நாரதன்ற னன்படி கோபிமாரே

35 விட்டாற் றொடருவண்டி கோபிமாரே – அவன்
விளையாட்டுக்காரனடி கோபிமாரே

36 கட்டியணைப்பனடி கோபிமாரே – அவன்
கைலாசஞ் சேர்ப்பனடி கோபிமாரே

37 சாதல் பிறத்தலிலான் கோபிமாரே – அவன்
சரஹணர்க்கு மாமனடி கோபிமாரே

38 மாதரைப்போ லாடுகின்றான் கோபிமாரே – அவன்
மட்டிலாக் காமனடி கோபிமாரே

39 ஓசை கடந்தவண்டி கோபிமாரே – அவன்
உட்கரண மானவண்டி கோபிமாரே

40 ஆசை தொலைத்தானடி கோபிமாரே – அவன்
ஆச்சரியமானவண்டி கோபிமாரே

41 மாறன்மறை யொப்பிநின்றான் கோபிமாரே – அவன்
மதிளரங்க நாதனடி கோபிமாரே

42 ஆறுமதமுள்ளமைத்தான் கோபிமாரே – அவன்
அதுவதுமாய் நின்றவண்டி கோபிமாரே

43 நடையில் மயக்குவண்டி கோபிமாரே – அவன்
நம்மைக்கெடுத்தவண்டி கோபிமாரே

44 இடையில் புகந்தவண்டி கோபிமாரே – அவன்
இன்பங்கடந்தவண்டி கோபிமாரே

45 உண்ணோக்க முற்றவண்டி கோபிமாரே – அவன்
உரலோடு பாய்ந்தவண்டி கோபிமாரே

46 கண்ணோடு கண்ணினைத்தான் கோபிமாரே – அவன்
காமியிலை கடவுளடி கோபிமாரே

47 வீதிவழி வந்தானடி கோபிமாரே – அவன்
விட்டுத்தொடர்ந்தானடி கோபிமாரே

48 சாதிமுறை யில்லவண்டி கோபிமாரே – அவன்
சங்கரற்கு மேலாண்டி கோபிமாரே

49 உடலுயிரைப் பிறிக்கின்றான் கோபிமாரே – அவன்
உதிட்டிரற்குச் சொந்தமடி கோபிமாரே



50 கடமுழுதுங் கழியென்றான் கோபிமாரே – அவன்
கடல்வண்ணத் தெய்வமடி கோபிமாரே

51 தொட்டகுறை வந்தடுக்கும் கோபிமாரே – அவன்
தூயர்களுக்காகுவண்டி கோபிமாரே

52 அட்டாங்க யோகியடி கோபிமாரே – அவன்
ஆதார பூதனடி கோபிமாரே

53 என்னுடலிலேறிநின்றான் கோபிமாரே – அவன்
ஏகாந்தமென்கின்றான் கோபிமாரே

54 அன்னவரைக் கைப்பிடித்தேன் கோபிமாரே – அவன்
அழகுதனஞ் சுவைத்தாண்டி கோபிமாரே

55 ராதா மகிணனடி கோபிமாரே – அவன்
ராமரச லோனடி கோபிமாரே

56 பாதாள பாதனடி கோபிமாரே – அவன்
பார்ப்பதற்குச் சிறியவண்டி கோபிமாரே

57 பாலைக் குடித்துவிட்டான் கோபிமாரே – அவன்
பச்சைமுகில் வண்ணனடி கோபிமாரே

58 காலங்கடந்து நின்றான் கோபிமாரே – அவன்
காதிகைதைக் காரணண்டி கோபிமாரே

59 க்ஷீராப்தி நாதனடி கோபிமாரே – அவன்
சிங்கார மோனனடி கோபிமாரே

60 ஆராலுங் காண்பரியன் கோபிமாரே – அவன்
அன்றியுலகில்லையடி கோபிமாரே

61 பீடுமன் பிரியனடி கோபிமாரே – அவன்
பிந்துநிறமானவண்டி கோபிமாரே

62 காடுமலை சென்றுவந்தான் கோபிமாரே – அவன்
கைலையிற் றவம்புரிந்தான் கோபிமாரே

63 கச்சினைக் கழற்றிவிட்டான் கோபிமாரே – அவன்
கையிரண்டும் பற்றிநின்றான் கோபிமாரே

64 உச்சிமுதல் தொட்டுதந்தான் கோபிமாரே – அவன்
உள்ளம் பறித்துவிட்டான் கோபிமாரே

65 பஞ்சவர் சகாயனடி கோபிமாரே – அவன்
பராபரமானவண்டி கோபிமாரே

66 நஞ்சமுதானவண்டி கோபிமாரே அவன்
நாலாறு மற்றவண்டி கோபிமாரே

67 பக்கமதில் வந்துநின்றான் கோபிமாரே – அவன்
பார்க்கும்போதொன்றுமில்லை கோபிமாரே

68 சக்கரமுஞ் சங்குமுடன் கோபிமாரே – அவன்
சார்ந்துநின்றான் கண்டேனடி கோபிமாரே

69 துரியங் கடந்தவண்டி கோபிமாரே – அவன்
துரியாதி தத்துளண்டி கோபிமாரே

70 கரியநிற மேகனடி கோபிமாரே – அவன்
காக்ஷிநிலை யற்றவனடி கோபிமாரே

71 ஆலிலையிற் றூங்கிநின்றான் கோபிமாரே – அவன்
அதிபால ரூபனடி கோபிமாரே

72 நீலநிற மேனியண்டி கோபிமாரே – அவன்
நிர்க்குண நிராமயண்டி கோபிமாரே

73 ஒன்றுமிரண்டுமல்லன் கோபிமாரே – அவன்
ஓங்கார நித்தியண்டி கோபிமாரே

74 அன்றுமின்று மானாண்டி கோபிமாரே – அவன்
அவதார புருஷனடி கோபிமாரே

75 மாதரசே யென்கின்றான் கோபிமாரே அவன்
மனநிலைமை கண்டறியேன் கோபிமாரே

76 கீதையுபதேசனடி கோபிமாரே – அவன்
கின்னரமும் பாடுவண்டி கோபிமாரே

77 வாக்குமன மில்லாண்டி கோபிமாரே – அவன்
வானம் பயின்றவண்டி கோபிமாரே



78 நீக்கமற நின்றவண்டி கோபிமாரே – அவன்
நெறியான நேயனடி கோபிமாரே

79 பார்வையிலே கொள்ளைகொண்டான் கோபிமாரே – அவன்
பரப்பிரஹ்மமென்கின்றான் கோபிமாரே

80 ஆர்வமிலா வத்தனடி கோபிமாரே – அவன்
அந்தரங்க நாயகண்டி கோபிமாரே

81 இருட்டறைக்குள் வந்துநின்றான் கோபிமாரே – அவன்
எங்குமொளியானதடி கோபிமாரே

82 அருக்கனரனானவண்டி கோபிமாரே – அவன்
அதுலஜக யோகனடி கோபிமாரே

83 காண்டீபர்க் கன்றுறைத்தான் கோபிமாரே – அவன்
கண்டுகொண்டு பாரென்றான் கோபிமாரே

84 ஆண்டானடிமையென்றான் கோபிமாரே – அவன்
அத்வைத ஜோதியடி கோபிமாரே

85 பாஞ்சாலிக் கண்ணனடி கோபிமாரே – அவன்
பார்த்தவரைப் பார்ப்பாண்டி கோபிமாரே

86 ஊஞ்சாடு முள்ளனடி கோபிமாரே – அவன்
உள்ளே நிறைந்தவண்டி கோபிமாரே

87 பாசமிலா பக்தர்கட்கு கோபிமாரே – அவன்
பசியில்லை யென்கிறான் கோபிமாரே

88 வாசவனுஞ் சூரியனுங் கோபிமாரே – அவன்
வழியடியில் வந்துநின்றார் கோபிமாரே

89 பரமார்த்த பண்டிதண்டி கோபிமாரே – அவன்
பாகமுறப் பற்றுவண்டி கோபிமாரே

90 அரவாடு மந்தணண்டி கோபிமாரே – அவன்
அசலநிதி யானவண்டி கோபிமாரே

91 மவுனமைந்து மானவண்டி கோபிமாரே – அவன்
மாறாத யோகியடி கோபிமாரே

92 கௌதமி சகோதரண்டி கோபிமாரே – அவன்
கர்த்தபரவீசனடி கோபிமாரே

93 கையைப் பிடித்திழுத்தான் கோபிமாரே – அவன்
கண்ணை மிரட்டுகின்றான் கோபிமாரே

94 பையவணைய வந்தான் கோபிமாரே – அவன்
பற்றிப் பிடித்துவிட்டான் கோபிமாரே

95 நாதமுடி நாதனடி கோபிமாரே – அவன்
நம்மைநித மாண்டவண்டி கோபிமாரே

96 கோதுகுண மில்லாண்டி கோபிமாரே – அவன்
குஞ்சரமா யோகனடி கோபிமாரே

97 குசிசகமுனி சொந்தமுனி கோபிமாரே – அவன்
குசிகனுக்குள்ளாகி நின்றான் கோபிமாரே

98 உசிதமிது வென்றறிந்தான் கோபிமாரே – அவன்
உள்ளூறக்க மேலென்றான் கோபிமாரே

99 திங்கள் வதனனடி கோபிமாரே – அவன்
தெய்வமறை வாசனடி கோபிமாரே

100 எங்கள் புருஷனடி கோபிமாரே – அவன்
ஏலேலஞ் சொன்னவண்டி கோபிமாரே

101 சோதரிய சுந்தரியே கோபிமாரே – அவன்
சோதரனென் றெண்ணுகிறேன் கோபிமாரே

102 நீதியிலா மானுடவர் கோபிமாரே – அவன்
நித்தியனைக் கள்வனென்பார் கோபிமாரே

103 அலையாத வுள்ளனடி கோபிமாரே – அவன்
ஆட்டம் பயின்றவண்டி கோபிமாரே

104 விலையாக வந்தவண்டி கோபிமாரே – அவன்
விட்டகுறைக்காரனடி கோபிமாரே

105 வைகுந்த தூதனடி கோபிமாரே – அவன்
வார்த்தைமறை யுண்மையடி கோபிமாரே



106 செய்குவதுமில்லையடி கோபிமாரே – அவன்
செய்தாலுஞ் செய்யாண்டி கோபிமாரே

107 தொலையாத தூரனடி கோபிமாரே – அவன்
தொய்த மறுத்தவண்டி கோபிமாரே

108 மலையேறி நின்றவண்டி கோபிமாரே – அவன்
மங்காத மேனியண்டி கோபிமாரே

109 ஆணல்ல பெண்ணல்ல கோபிமாரே – அவன்
அலியல்ல ஆண்டவண்டி கோபிமாரே

110 நீணிலமெலா நிறைந்தான் கோபிமாரே – அவன்
நீள்பாலிநெய்போல கோபிமாரே

111 சேலை யொளித்தவண்டி கோபிமாரே – அவன்
சேணாகி நின்றவண்டி கோபிமாரே

112 நீலமனமில்லாண்டி கோபிமாரே – அவன்
நிர்க்குணத்தினிச்சயண்டி கோபிமாரே

113 நாம்செய் தவரூபமடி கோபிமாரே – அவன்
நாமாக்குநாதனடி கோபிமாரே

114 தாம்பிரமுந் தங்கமதைக் கோபிமாரே – அவன்
தானகச் செய்தவண்டி கோபிமாரே

115 பசுபாச மானவண்டி கோபிமாரே – அவன்
பதியாய் நிலைத்தவண்டி கோபிமாரே

116 அசியான ஐக்யனடி கோபிமாரே – அவன்
அருவுருவ மானவண்டி கோபிமாரே

117 பதரியிடைத்தவஞ் செய்தான் கோபிமாரே – அவன்
பரசிவனோடமர் புரிந்தான் கோபிமாரே

118 மதங்களெலாம் பொய்யென்றான் கோபிமாரே – அவன்
மதமொழிந்த மார்க்கனடி கோபிமாரே

119 தேவகி குமாரனடி கோபிமாரே – அவன்
தேவாதி தேவனடி கோபிமாரே

120 ஆவலதைத் தீர்த்தவண்டி கோபிமாரே – அவன்
அடியார்க் கடியனடி கோபிமாரே

121 பெரியமக ஜோதியொன்று கோபிமாரே – அவன்
பின்னாலே சென்றதடி கோபிமாரே

122 உறிவெண்ணெ யுண்டவண்டி கோபிமாரே – அவன்
உத்தவற் குரைத்தவண்டி கோபிமாரே

123 கலிகால பூபனடி கோபிமாரே அவன்
கங்குல்பக லற்றவண்டி கோபிமாரே

124 கலையாலுங்காணாண்டி கோபிமாரே – அவன்
காரணத்துக் குள்ளாண்டி கோபிமாரே

125 சித்திநசை யொழியென்றான் கோபிமாரே – அவன்
சித்திநிலை ஞானமென்றான் கோபிமாரே

126 புத்திநிலைக் கெட்டகிலான் கோபிமாரே – அவன்
புத்தபிர போதனடி கோபிமாரே

127 கொங்கையினைப் பற்றுகின்றான் கோபிமாரே – அவன்
கூடார்த்தமிது வென்றான் கோபிமாரே

128 செங்கைதனைச் சேர்த்திழுத்தான் கோபிமாரே – அவன்
செல்வமென்ற செப்பிநின்றான் கோபிமாரே

129 மாதுமையாளண்ணனடி கோபிமாரே – அவன்
மாசில்லாத் தெய்வமடி கோபிமாரே

130 வேதஞ் சொல்லாதவண்டி கோபிமாரே – அவன்
வியாபகமாம் பிரஹ்மமடி கோபிமாரே

131 சருவமுந்தா னென்றவண்டி கோபிமாரே – அவன்
சத்தியத்தை யுற்றவண்டி கோபிமாரே

132 நிருவிகற்ப மானவண்டி கோபிமாரே அவன்
நேயங் கடந்தவண்டி கோபிமாரே

133 மங்கையரே வாருமென்றான் கோபிமாரே – அவன்
மானங்குலைத்து நின்றான் கோபிமாரே



134 சங்கரனோ ஷண்முகனோ கோபிமாரே – அவன்
சத்துவ சொருபனடி கோபிமாரே

135 ஆழியிடைத் துயில்கின்றான் கோபிமாரே – அவன்
அந்தணர்தம் செல்வனடி கோபிமாரே

136 தாழியிடைத் தானொழிந்தான் கோபிமாரே – அவன்
தத்துவத்தை யறியேண்டி கோபிமாரே

137 அல்குலையே நோக்குகின்றான் கோபிமாரே – அவன்
அவதார மென்கின்றார் கோபிமாரே

138 சொல்வழியே நின்றவண்டி கோபிமாரே – அவன்
சுத்தபரஞ் சோதியடி கோபிமாரே

139 நாராயண னருளில் கோபிமாரே – அவன்
நாலிலொரு பாகனடி கோபிமாரே

140 சீராரும் பரமார்த்தன் கோபிமாரே – அவன்
ஜெகமுய்ய வந்தவண்டி கோபிமாரே

141 சூலாக வாக்கிடுவான் கோபிமாரே – அவன்
சுற்றிவரு மாதர்களை கோபிமாரே

142 வேலாயுதன் மருகன் கோபிமாரே – அவன்
வேதாந்தக் கண்ணனுக்கு கோபிமாரே

143 காலிதனை மேயத்துவந்தான் கோபிமாரே – அவன்
கண்ஞானக் கண்ணனடி கோபிமாரே

144 கோலி விளையாடுகின்றான் கோபிமாரே – அவன்
கூடஸ்த பிரஹ்மமென்றான் கோபிமாரே

145 மூவர் முதல்வனடி கோபிமாரே – அவன்
மோனமுறை யானவண்டி கோபிமாரே

146 தேவர் சகாயனடி கோபிமாரே – அவன்
தேடாத அன்பனடி கோபிமாரே

147 பந்தமிலாப் பரதேசன் கோபிமாரே – அவன்
பற்றினைநீ பற்றென்றான் கோபிமாரே

148 சொந்தவினை யொழியென்றான் கோபிமாரே - அவன்
சூக்குமத்துள் நுழைகின்றான் கோபிமாரே

149 ஆங்கார மற்றவண்டி கோபிமாரே - அவன்
ஆறுங் கடந்தவண்டி கோபிமாரே

150 ஓங்கார மானவண்டி கோபிமாரே - அவன்
ஓசை யறுத்தவண்டி கோபிமாரே

151 சனற்குமாரர் போதனடி கோபிமாரே - அவன்
சாகசத்தைக் கண்டறியேன் கோபிமாரே

152 தனக்கென ஒன்றுமிலான் கோபிமாரே - அவன்
தாரணியுளோர்க் கென்கிறான் கோபிமாரே

153 பரமபத நாதனடி கோபிமாரே - அவன்
பரமநிலை மோகனடி கோபிமாரே

154 அரவணையினின்ற வண்டி கோபிமாரே - அவன்
அரவினடித்தாற்று வண்டி கோபிமாரே

155 ஆதிமறையான வண்டி கோபிமாரே - அவன்
அதியோக ஜாலனடி கோபிமாரே

156 நீதி பரிபாலனடி கோபிமாரே - அவன்
நித்தியமாயுள்ள வண்டி கோபிமாரே

157 மனக்கவலை தீர்த்துவைத்தான் கோபிமாரே - அவன்
மாதல்லவென்கிறான் கோபிமாரே

158 எனக்கபயமீந்தாண்டி கோபிமாரே - அவன்
என்னுள்ளே தோன்றுகின்றான் கோபிமாரே

159 இல்லறமுந்துறவறமுங் கோபிமாரே - அவன்
இரண்டில்லையென்கின்றான் கோபிமாரே

160 தொல்வினைகளையறுத்தான் கோபிமாரே - அவன்
துத்திதனையூதுகின்றான் கோபிமாரே

161 அந்தணர் சகாயனடி கோபிமாரே - அவன்
ஆசார சீலனடி கோபிமாரே



162 சிந்தையடக்கி நின்றான் கோபிமாரே - அவன்
ஜெகமெல்லா மோய்ந்ததடி, கோபிமாரே

163 அம்மணமாக்கி விட்டான் கோபிமாரே - அவன்
அணைத்தணைத்து ஆறுகின்றான் கோபிமாரே

164 நம்மையறிவாரவராங் கோபிமாரே - அவன்
நாட்டமெலா நம்மிடத்தே கோபிமாரே

165 சாங்கியத்தையொப்பி நின்றான் கோபிமாரே - அவன்
சகலமதபோதகண்டி கோபிமாரே

166 பாங்கியரோடினி தணைந்தேன் கோபிமாரே - அவன்
பற்றொழித்துவாவென்றான் கோபிமாரே

167 மாதவனாமாயவனாங் கோபிமாரே - அவன்
மகிதலத்தையுண்டவனாங் கோபிமாரே

168 போதமளிபூரணனாங் கோபிமாரே - அவன்
புத்தா வதாரனடி கோபிமாரே

169 நீயுநானுமொன்றென்றான் கோபிமாரே - அவன்
நிச்சயமென்றே மொழிந்தான் கோபிமாரே

170 பாயுமனம் பாயவிலை கோபிமாரே - அவன்
பக்கமதிற் சென்றவுடன் கோபிமாரே

171 முக்குணத்துமுத்தவண்டி கோபிமாரே - அவன்
மூன்றுங் கடந்தவண்டி கோபிமாரே

172 சக்கரத்தைத் தாங்குவண்டி கோபிமாரே - அவன்
சங்கைத்தரித்தாண்டி கோபிமாரே

173 நாற்றவுடலென்கின்றான் கோபிமாரே - அவன்
நம்மையெலாந் தள்ளிவிட்டான் கோபிமாரே

174 கூற்றன்வர அஞ்சுகின்றான் கோபிமாரே - அவன்
கொள்கையிலே பற்றிநின்றால் கோபிமாரே

175 தரும சொரூபனடி கோபிமாரே - அவன்
தத்பத நிதானனடி கோபிமாரே

176 உருவம் பயின்றவண்டி கோபிமாரே – அவன்
உருவமிலா வுத்தமண்டி கோபிமாரே

177 புத்தனெனத் தோன்றிநின்றான் கோபிமாரே – அவன்
பூரணத்தைப் போதித்தான் கோபிமாரே

178 புத்தியிடைத் தோன்றுகின்றான் கோபிமாரே – அவன்
பூசைமிகப் பண்ணுகின்றான் கோபிமாரே

179 அதிபோக மோகனடி கோபிமாரே – அவன்
அசோதை புதல்வனடி கோபிமாரே

180 மதியேமுமானவண்டி கோபிமாரே – அவன்
மதனாந்தகாரனடி கோபிமாரே

181 ஜாலவினோதனடி கோபிமாரே – அவன்
சச்சிதானந்தனடி கோபிமாரே

182 ஞானமளித்தவண்டி கோபிமாரே – அவன்
ஞாதுருவாய் நின்றவண்டி கோபிமாரே

183 முத்தரடித்தூசியதை கோபிமாரே – அவன்
முழுத்தெய்வமென்கின்றான் கோபிமாரே

184 செத்தவரை யெழுப்புகின்றான் கோபிமாரே – அவன்
செய்யாததொன்றுமில்லை கோபிமாரே

185 மலையைப் பிடித்தவண்டி கோபிமாரே அவன்
மாமரத்தை யெய்தவண்டி கோபிமாரே

186 கலையைக் கழித்தவண்டி கோபிமாரே – அவன்
காணாக் கமலனடி கோபிமாரே

187 ராஜாங்க யீசனடி கோபிமாரே – அவன்
ராதை மணவாளனடி கோபிமாரே

188 ராஜாங்க யோகியடி கோபிமாரே – அவன்
ராகமின்றியானவண்டி கோபிமாரே

189 பத்திவரப் பண்ணுகின்றான் கோபிமாரே – அவன்
பார்த்தாலும் போதுமடி கோபிமாரே



190 சித்தமதி லொளிக்கின்றான் கோபிமாரே – அவன்
சிறிதளவு காட்டுகின்றான் கோபிமாரே

191 ஸ்ரீராம ராமனடி கோபிமாரே – அவன்
சீதை மணவாளனடி கோபிமாரே

192 நாராயணன்பரமன் கோபிமாரே – அவன்
நாலுங்கடந்தவண்டி கோபிமாரே

193 மாதவமுகுந்தனடி கோபிமாரே – அவன்
மாதவர்சகாயனடி கோபிமாரே

194 வேதநிலைக் கெட்டாண்டி கோபிமாரே – அவன்
வெட்டவெளியானவண்டி கோபிமாரே

195 பரவாசுதேவனடி கோபிமாரே – அவன்
பண்டரிபுரத்தனடி கோபிமாரே

196 கரவாடுங்கள்வனடி கோபிமாரே – அவன்
கண்டவரைக் கொண்டவண்டி கோபிமாரே

197 மரமேழு மெய்தவண்டி கோபிமாரே – அவன்
மன்றுண்டமாடுவண்டி கோபிமாரே

198 சரராஜ செல்வனடி கோபிமாரே – அவன்
சர்ப்ப மதிற்றுயின்றாண்டி கோபிமாரே

199 மஹரிஷிகள் நாமெல்லாம் கோபிமாரே – அவன்
மறந்துவிட்டுப் பேசுகின்றோம் கோபிமாரே

200 மஹரிஷிகள் தெய்வமடி கோபிமாரே – அவன்
மாதவஞ்செய் யென்கின்றான் கோபிமாரே

201 வாழியெங்கள் கண்ணனடி கோபிமாரே – அவன்
வாழியிரு பாதமடி கோபிமாரே

202 வாழி ஜெகநாதனடி கோபிமாரே அவன்
வந்தவழி வந்தவரும் கோபிமாரே.

ஓம் தத் ஸத்

ஸ்ரீ விலக்ஷணானந்தர் ரேடியோவில் உபந்யசித்த

# ஹிந்து மதத்தின் சமரசமும், சாந்தமும்

மனுஷ்யனாகப் பிறந்த ஒவ்வொருவனும் அவனவன் அடைய வேண்டிய சாந்தி சொரூபமான **சத்திய மார்க்கமானது** ஒழுங்கான கட்டுப்பாடுள்ள முறையில் **உண்மைக் கடவுளை** அனுபவத்திலறிய ஏதுவாக்கக் கூடிய கொள்கைகளைக் கொண்டதற்கு மதம் என்று பெயர்.

அவ்வாறுள்ள மதங்களில் ஹிந்துமதமானது மற்ற மதங் களுக்கெலலாம் முந்தி உள்ளதும் விஸ்தாரமான பாகங்களோடு கூடியதும் அவரவர்கள் புத்தி விசாலத்திற்கேற்றவாறு பலபல பாகுபாடுகளை உடையதும் நேரே கடவுளை அறிவிக்கும் சுவாதந்தர்ய சக்தி வாய்ந்தவையாயு மிருக்கின்றது.

இந்த ஹிந்துமதத்திற்கு **சனாதன மதம், வேத மதம், பிரம்ம மதம்** என்ற பெயர்களும் உண்டு. ஆராய்ச்சி செய்து பார்க்கும்போது இந்த மதம் உண்டான காலம் தெரியவில்லை. அதனால் இதற்கு **அனாதி** என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. ஆதியில் இந்த மதத்தை விசாரித்து, அடைந்து, அனுஷ்டித்து, அனுபவித்து மேலான பிரயோஜனத்தை அடைந்தவர்களில் பல மகரிஷிகளும் சக்கரவர்த்திகளும், ராஜரிஷிகளும் அரசர் களும், பதிவிரதா, சிரோன்மணிகளான பெண்மணிகளும் இருந் திருக்கிறார்கள்.

வெகு காலத்திற்குமுன் இந்துமதத்தின் உத்தம புருஷ ராகிய **சுவாயம்பு மனு** என்பவர் இம்மதத்தின் உண்மைத்



தத்துவங்களையும், உயர்வையும், சாஸ்திர ரூபமாக வெளிப் படுத்தியிருக்கிறார். விஸ்தாரமான பெரிய சமுத்திரத் தினின்று ஒரு அவுன்ஸ் ஜலம் எடுப்பதுபோல அகண்டமான வெகு ஆழமுள்ள **ஹிந்துமத சமுத்திரத்தினின்று** எடுத்த ஒரு அவுன்ஸ் அளவுள்ள உபந்நியாசமாகவே இப்போது பேசுகிற விஷயம் இருப்பதாக நீங்கள் கண்டு கொள்ளுங்கள்.

முதற் காலத்தில் ஹிந்துமதத்தின் அருமை பெருமைகளை வெளியிட்டவர்களில் **வசிஷ்டர், அகஸ்தியர், பதஞ்சலி, தத்தாத்திரேயர், யாக்ஞவல்லியர், பிரஹ்லாதர்** இவர்கள் முக்கியமானவர்கள்.

மத்திய காலத்தில் **ஜாமதக்கினியர், ஸ்வேதகேது, ஜனகர், ஸ்ரீராகவர், அமிர்தசாலர், ஜாபாலி** இவர்கள் முதன்மை பெற்றவர்கள்.

கடைசி காலத்தில் **வியாசர், கிருஷ்ணன், பீஷ்மர், சங்கரர், ராமானுஜர், மத்வர், புத்தர், கிருஷ்ண சைதன்யர், கபீர்தாஸ், ராமகிருஷ்ண பரம ஹம்ஸர், தயானந்த சரஸ்வதி, விவேகாநந்தர், பாலகங்காதர திலகர்** இவர்கள் பிரஸித்தி பெற்றவர்கள்.

இந்துமதத்தின் பெருமை, உயர்வு இவைகளைப்பற்றிப் பேசுவதென்றால், எத்தனை வருஷங்கள் வேண்டுமானாலும் உபந்நியாசம்செய்யலாம். அதன்ஒவ்வொருகொள்கைகளையும். தத்துவங்களையும், வேறுபாடுகளையும், பிரித்துப் பார்த்து ஒவ்வொன்றின் நுட்பங்களையும் ஆராய்ந்து அவைகளுக்கு வியாக்யானம் செய்து பேசுவதென்றால் சாமான்யமான இந்த சொற்ப நேரத்திற்குள்ளும், சில மணி நேரத்திற்குள்ளும், வருஷங்களுக்குள்ளும், முடியாத காரியமல்லவா?

மஹம்மேரு பருவதத்திற்குச் சென்று அதிலுள்ள சாமான்களைத் தன்னால் கூடியவரை எடுத்துக் கொண்டு வந்தவன், நான் மகம்மேரு பர்வதம் சென்றிருக்கிறேன், அதன்மீது ஏறியுமிருக்கிறேன், அதன் மீதுள்ள எல்லா பாகங்களும் எனக்குத் தெரியும். அதிலுள்ள சாமான்களும் என்னிடமிருக்கின்றனவென்றால்அந்தப்பர்வதத்தில்எத்தனையில் ஒருபாகம் அவன் கண்ட றிந்திருக்கிறான் என்பதை நீங்களே

யோசித்துப் பாருங்கள். அதுபோல, ஹிந்து மதம் என்ற பெரிய பருவதத்தில், ஒரு சிறிய பாகத்தை அறிந்து கொண்டவனும், அம்மதத்தின் உண்மையை அறிந்து கொண்டதாகப் பேசி விடலாம்.

எங்கும் நிறைந்த சர்வ வியாபியாகிய கடவுள் சாஸ்வதமாக எப்போதும் இருப்பதுபோலவே நமது மதமும் எப்போதும் இருந்து கொண்டே யிருக்கிறது. யாராவது நீங்கள் எம்மதத்தைச் சேர்ந்தவர் என்று என்னைக் கேட்டால் இந்த பூமண்டலத்தில் பிறந்து உருவத்துடனிருந்து, மடிந்துபோன எவருடைய மதத்தையுஞ் சேர்ந்தவனல்ல. மேலுலகத்திலுள்ள எந்த உருவங்களின் பெயருள்ள மதத்தைச் சேர்ந்தவனுமல்ல. எப்போதும் உள்ளதும், எல்லோருக்கும் பொதுவானதும். சமரசமானதும், சாந்த சொரூபமாயும், முக்குணங்களுக்கும் அப்பாற் பட்டதாயுமுள்ள அகண்டமான இந்துமதத்தைச் சேர்ந்தவனென்றே சொல்வேன்.

இந்த அகண்டமான இந்துமதத்தை அடியோடு அழித்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் பல பல காலங்களில பல பல சிறு மதங்கள் தோன்றின. அக்கிரமமான முயற்சிகளும் செய்யப்பட்டன. பல பிரபல அரசர்கள் கிளை மதங்களுக்கு ஆதரவும் அளித்து வந்தார்கள். பலாத்காரப்படுத்தியும் ஒன்றும் பலிக்கவில்லை. சமுத்திரத்தில் அலைகள், திரைகள், குமிழிகள், நுரைகள், திவலைகள் இவைகள் தோன்றி மறைவதுபோல நமது **சனாதன ஹிந்து மதம்** என்ற பெயர் கொண்ட சமுத்திரத்தில் ஒவ்வொரு காலங்களிலும் அலை, திரை, குமிழி, நுரை, திவலை போன்ற பல மதங்கள் தோன்றி, தோன்றி, அம்மதங்கள் தோன்றின இந்துமத சமுத்திரத்திலேயே அவைகள் அடங்கி விட்டன.

தற்போதும் புதிது புதிதாக, நூதனமான அலை மதங்கள் தோன்றியிருக்கின்றன. மற்ற மதங்களெல்லாம் ஒவ்வொரு ஆசாரியரின் பெயரை வைத்துக் கொண்ட மதங்களாக இருக்கின்றன. நமது தெய்வீகமான அகண்ட ஹிந்துமதமோ, ஒரு உருவத்தின் பெயரையோ, ஒரு ஆசாரியரின் நாமத்தையோ வகித்துக் கொண்டதாக ஏற்படவில்லை. எல்லா மதங்களையும்



விருப்ப வெறுப்பின்றி ஒப்புக் கொண்டு தன் கொள்கைகளையும், மதத்தையும் விடாமல் விளங்குவது நமது மதம் ஒன்றேயாம். மற்ற மதங்களிற் செல்லப்பட்டவர்கள் கடவுளை அறிய முடியாதென்றும் எங்கள் மதத்தில்தான் கடவுள் இருக்கிறார் என்றும், தாக்கிப் பேசப்படுகிறது. ஆனால் நமது மதம் அப்படி கூறாமல் உலகத்திலுள்ள ஒவ்வொரு மதங்களும் கால தேச வர்த்தமானங்களுக் கேற்றபடி தெய்வ சக்தி பெற்ற மகாத்மாக்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றும், அவை ஒவ்வொன்றும் ஒரே கடவுளை அடையும் மார்க்கம்தான் என்றும் போதித்து வருகிறது.

வெகு காலத்துக்கு முன்னால் **வசிஷ்டர்** ஞானவாசிஷ்ட கிரந்தத்திலும், **பீஷ்மர்** சாந்தி பர்வ உபந்யாசத்திலும், ஸ்ரீ கிருஷ்ண பகவான் பகவத்கீதையிலும், **ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்** உபதேச வாக்கியங்களிலும், ஹிந்துமத சனாதன தருமத்தின் உயர்வு, பெருமைகளையும், சர்வமத சமத்துவ, சமரச பாவத்தையும் காட்டப்பட்டிருக்கிறது. ஹிந்துமதத்திலேயே பல மதங்கள் இருப்பதாகவும், ஒவ்வொரு மதங்களுக்கும் ஒவ்வொரு தெய்வம் இருப்பதாகவும், ஆகவே ஒரு ஹிந்துமதத்தில் பல தெய்வங்கள் இருக்கிற தென்றும் மற்ற மதஸ்தர்கள் குறை கூறுகிறார்கள். ஹிந்துமதம் என்பது ஒன்றுதான். அதற்குக் கடவுள் ஒருவர்தான். அவர் எங்கும் நிறைந்தவர். சர்வ வியாபி. அவருக்கு நாமரூபம் கிடையாது. இருப்பிடமும் இல்லை, ஆண், பெண், அலி என்ற மூன்றுவித பேதமும் இல்லாதவர். சிற்சில காலங்களில் உலகத்திற்கு கஷ்டமும், ஆபத்தும் ஏற்படும் காலத்தில் கடவுள் உத்திரவால் காலத்துக் கேற்றவாறு தெய்வ சக்திகளைக் கொண்டு **அவதார புருஷர்கள்** வருகிற வழக்கமாக இருந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு அவதார புருஷர்களையும் ஒவ்வொரு தெய்வங்களாகப் பாவித்து அந்தந்த மார்க்கங்களில் சொல்லக்கூடியது தவிர வேறல்ல. நமது மதத்தில் **மாதா, பிதா, குரு, மணவாளன்** இவர்களைத் தெய்வமாகப் பாவிக்கும்படி சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

அதன் உட்கருத்து என்னவென்றால், பார்க்கப்பட்ட வஸ்துக்கள் யெல்லாம் கடவுளாகத் தோன்ற வேண்டுமானால்

நமது மனத்தை ஒருமுகப்படுத்தி, மேற்கூறிய அவசியமான முக்கியஸ்தர்களை தெய்வமாகப் பாவித்து வந்தால் வாஸ்தவ மாக எங்கும் பிரம்மமென்கின்ற அபரோக்ஷ ஞானம் வாய்த்து விடுகிறது. முதலில் பாவனையாக எல்லா வஸ்துக்களையும் பரம் பொருளாகப் பாவித்து வந்தால் காலாந்திரத்தில் அது அனுபவப் பிரத்தியக்ஷமாக முடிகிறது.

சரித்திர ஆராய்ச்சிப்படி ஒவ்வொரு காலத்திலும் நமது நாட்டிற்குள் வந்த ஒவ்வொரு அன்னிய மதங்களுக்கும், நமது ஹிந்து மதம் இடங்கொடுத்து ஆதரித்து வந்திருக்கிறது. முற்கால நிலமையிலும், இக்காலத்திலும், பாரமார்த்த தெய்வீக ஆராய்ச்சி வழியில் நமது மதம் உன்னத ஸ்திதியை அடைந்திருப்பதில் சந்தேகமேயில்லை. பிற மதஸ்தர்களும் அன்னிய நாட்டவர்களும் இதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

ஜாதி பேதத்தில் உயர்வு தாழ்வு இம்மதத்தில் ஏற்பட்டிருக் கிறதென்று அனேகர் நினைக்கலாம். அவைகளும் யுக்திக்குப் பொருத்தமானதாகத் தெரியவில்லை. நமது பூர்வீகமகரிஷிகளில் சரித்திர ஆராய்ச்சிப்படி ஜாதி வித்தியாசத்தைப் பார்த்தால் பற்பல ஜாதியர்களாயிருந்திருக்கிறார்கள். வடநாட்டு 640 தாசர் களிலும், தென்னாட்டு 12 ஆழ்வாராதியர்கள், 63 நாயன்மார்கள், 18 சித்தர்கள் இவர்கள் ஜாதி வரலாறுகளைப் பார்க்கும்பொழுது அவர்களும் நானாவித ஜாதியர்களை உடைத்தானவர்களாக இருக்கிறார்கள்.

இந்து மதத்தின் சமீபகால அவதார புருஷராகிய ஸ்ரீ ராமானுஜாசாரியார் **எவன் தெய்வத்தினிடம் உண்மையான பக்தி யுடையவனோ அவனே உயர்ந்த ஜாதி** என்றும், அப்படியே சிஷ்யர்களுக்கு போதித்தும், அனுஷ்டித்துக் காண்பித்தும் இருக்கிறார்.

வெளி விஷயமாகப் பார்க்கும்போது **வர்த்தகம், விவசாயம், சங்கீதம், சிற்பம், உபந்யாசம், சமையல், ஜோதிடம், ஆயுர்வேதம், ரஸாயனம், நாட்டியம், அரசியல், நீதிமுறைகள், தண்டனை** இவைகளிலும் நமது ஹிந்துமத்தினர் தேர்ச்சி பெற்று அவைகளுக்கேற்ற பிரபல சாஸ்திரங்களையும் எழுதியிருக்கிறார்கள்.



சித்தி மார்க்கங்களைக் கவனிக்கும்போதும் **பரகாயப் பிரவேசம், ஆகாய கமனம், திரிகால ஞானம், சூக்ஷ்ம திருஷ்டி, ஞான திருஷ்டி, தத்துவ ஆராய்ச்சி, அஷ்டாங்க யோகம், திடீரென்று மறைதல், பல ரூபங்களாகத் தோற்றுதல்** இவ்விதமான சித்தி மார்க்கங்களிலும், தேர்ச்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள்.

சுத்த சாத்வீகமான பரம ஏகாந்த பாரமார்த்தீக வழியில் ஸ்தூல சரீரத்தை ஸ்வாதீனம் செய்து பத்து இந்திரியங்களையும், அதனதன் இஷ்டப்படி விடாது தடுத்து, பிராண வாயுவை அதன் உற்பத்தி ஸ்தானமாகிய மூலாதார குண்டலி சக்தியில் கொண்டுபோய் நிறுத்தி, மனதை அசையாமல் செய்து கொண்டு, புத்தி தத்துவத்தையும் தள்ளி, வித்தியா தத்துவம் மாயா தத்துவம், பிருகிருதி தத்துவம் இவைகளை முறையே அடைந்து, அவைகளையும் தாண்டி, அப்பாலுள்ள **சூன்ய தரிசனம், கூடஸ்த தரிசனம், பிரம்ம தரிசனம்** பெற்று, தொண்ணாற்றாறு தத்துவங்களும், ஓயப் பெற்று பிரம்ம நிஷ்டையில் நிலைத்த மகான்கள் நமது நாட்டில் அநேகர் இருக்கிறார்கள், அவர்களில் முதன்மை பெற்றவர் பரமேஸ்வர ராகிய **தக்ஷிணாமூர்த்தி**, ஹிமாசலத்தின் பத்திரீ நாராயண வனத்தில் மஹா விஷ்ணுவான **நாராயன மகரிஷி, தத்தாத்திரேயர், சுகர், புத்தர், கிருஷ்ண சைதன்யர், ராமகிருஷ்ண பரமஹம்சர்.**

இவ்விதமாக லௌகீக வைதீக மார்க்கங்களிலும், நமது மதம் சிறப்புற்று விளங்கி வருவதென்பது வெளிப்படை. இதைத் தவிர நமது பாரத நாட்டுக்கும், அதில் குடி கொண்டி ருக்கும் இந்து மதத்திற்கும், பெரிய விசேஷம் என்னவென்றால் **பரமசிவனாகிய தக்ஷிணாமூர்த்தி தேவரின்** நேர் பார்வை நம் நாட்டில் படுவதேயாகும்.

முன் ஆதியில் கைலாச சிகரத்திலுள்ள திரிநேத்திரதாரி யாகிய சங்கரரிடம் பிரம்ம தேவரது புத்திரர்களாகிய **சனகன், சனந்தன், சனாதனன், சனத்குமாரன்** என்ற ஐந்து வயதுள்ளவர் களும், அவதூதர்களும், எல்லாம் தெரிந்தும், ஒன்று மட்டும் தெரியாதவர்களுமான அந்நால்வரும் சென்று விதிப்படி பரம சிவனை வணங்கி, “எங்களுக்கு எல்லாம் தெரியும், பிரம்ம

அனுபவ மாத்திரம் விளங்கவில்லை. ஆகையால் அதை எங்களுக்கு உபதேசித்து எங்களை ரக்ஷிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர்.

அதற்குப் பரமசிவன் அவர்களை நோக்கி, "உங்களுக்கு அந்தப் பரமபதத்தை அடைய இச்சை இருக்குமானால், சரீர ஆசை கூடாது. ஓரிடத்தில் இருப்பு வைத்துக் கொள்ளக் கூடாது. மனைவி, புத்திரன், செல்வம் இவைகளில் இச்சையை ஒழித்திருக்க வேண்டும். அப்படி நீங்கள் இருக்கிறீர்களா?" என்று அவர்களை வினாவியபோது, "அன்னவர்கள் தெய்வமாகியும் ஆசாரியருமான இந்தப் பரமசிவனுக்கே சரீர ஆசையிருக்கிறது. கைலாசத்தை இருப்பிடமாக வைத்துக் கொண்டிருக்கிறார். உமா தேவியர், கங்கை என்ற இரு மனைவியரும், கணபதி, முருகன், வீரபத்திரன் என்ற புத்திரர்களும் மற்றும் செல்வங்களும் இருக்கின்றன. நமக்கு மாத்திரம் கூடாதென்று போதிக்கிறார்" என்ற சந்தேகம் தோன்றியவுடன் திரிநேத்திரதாரி யாகிய பகவான் அந்நால்வர்களின் சந்தேகத்தைத் தீர்க்கும் பொருட்டு மனைவியாக உமாதேவியாரையும், புத்திரர்களையும், கங்கையையும், நந்திதேவர் முதலிய சிவ கணங்களையும், மற்றும் உள்ள பூத கணங்களையும், தக்ஷப் பிரஜாபதியின் யாகத்தை முன்னிட்டு அனுப்பிவிட்டு சனகாதி நால்வர்களையும் அழைத்துக் கொண்டு கௌபீனதாரியாய், சகலத்தைம் துறந்து, கடுந்துறவு வேடம் பூண்டு, இமயமலையின் உச்சியில் வெகுதூரம் தெற்கு நோக்கி வந்து, அங்குள்ள தீர்த்த அருவிகள் நிறையப் பெற்ற விசாலமான ஓர் கல்லால விருக்ஷத்தினடியில் தெற்கு முகமாக வீராசனத்தில் வீற்றிருந்து ஐந்து மௌனங்களையும் கடந்த மகாமௌனத்தை உபதேசித்தருளினாரென்று சாஸ்திரங்கள் மூலமாகத் தெரிகிறது.

**ஜகத்காரண வஸ்துவாகிய பரமேஸ்வரர்** மனைவி, மக்கள், இருப்பிடம் அத்தனையும் துறந்த சன்னியாச உருவத்துடன், பரம காருண்யத்தோடு தனது இரு கண் விழிகளையும், வடக்கே இமயமலை சிகரம், தெற்கு கன்னியாகுமரி, மேற்கே துவாரகை, கிழக்கே ஜகந்நாதம் இந்நான்கு எல்லைக்குள் அடங்கிய நமது பாரத கண்டத்தையும், அதில் புராதனமாக அமைந்திருக்கப்பட்ட



ஹிந்துமதத்தையும் பார்வையிட்டிருப்பதானது, இன்னும் கோடி மடங்கு விசேஷத்தை அளிக்கிறது. அதனாலேயே அன்னவருக்குத் **தக்ஷிணாமூர்த்தி** என்ற பெயர் வாய்க்கப் பட்டிருக்கிறது.

இமயமலை உச்சியில் சனகாதி யோகிகளுக்காக தெற்கு நோக்கி உபதேசிக்காமல், கிழக்கு நோக்கியிருந்தால் சைனா முதலிய தேசங்களுக்கும், மேற்கே பார்த்திருந்தால் ஐரோப்பா முதலிய தேசங்களுக்கும், அவரது திருஷ்டியின் மகத்துவம் திரும்பியிருக்கு மல்லவா? அவ்வாறு ஏற்பட்டு விடாமல் தெற்கு நோக்கி இருந்ததின் உண்மையையும், ரகஸியத்தையும் ஆலோசித்துப் பாருங்கள். கடவுளைப் பற்றி ஜனங்களைத் தூண்டிப் போதிக்கவும், சன்மார்க்கமான விஷயங்களை பிரஜைகளுக்கு எடுத்துக் காட்டி, உபதேசிக்க வேண்டிய தெய்வ சக்தியுள்ள அவதார புருஷர்களெல்லாம் நமது பாரத கண்டத்திலேயே அவதரித்திருப்பதால், சர்வேஸ்வரராகிய ஸ்ரீ மகாதேவரது இரு கண் விழி மலர்களும், நம் நாட்டில் பதிந் திருக்கிறதென்ற நாம் சந்தேகமின்றி நினைக்கிறோம்.

தெய்வீமான நமது இந்து மதமானது மகாபலி சக்கரவர்த்தி யின் பிதாவாகிய **விரோசனன்** என்பவனால் ஸ்தாபிக்கப்பட்ட நாஸ்திக மதத்திற்கும், **மயில் ராவணன், பாணாசுரன், கோரக்கன்** முதலியவரால் ஸ்தாபிக்கப்பட்ட சக்தி மதத்துக்கும், **மகம்மது நபி நாயகம்** அவர்களால் நிறுத்தப்பட்ட இஸ்லாமிய மதத்துக்கும், **ஏசு நாதரால்** நிறுத்தப்பட்ட கிருஸ்தவ மதத்துக்கும் மற்றும் **சமணம், ஜெயினம்** முதலிய மதத்துக்கும், அந்தந்த காலங்களில் (நமது மதம்) இடங்கொடுத்து வந்திருக்கிறதென் பதை சரித்திர மூலமாக அறியலாம். மற்ற மதங்களுக்கு ஆபத்து வரும்போது நமது மதம், இடம் கொடுத்து, ஆதரித்து வந்திருக்கிறது. இந்துக்களாகிய நாங்கள் ஒரு மதத்தையும் குறைவாக நினைக்க மாட்டோம். ஒவ்வொரு மதமும் மகான்களால் ஸ்தாபிக்கப்பட்ட தென்பதை மறக்க மாட்டோம். எது வந்தாலும் எங்கள் மதத்தைவிட்டுப் பிரள மாட்டோம். மற்ற மதங்களை இகழ்ந்து பேச மாட்டோம். அந்நிய மதங்களில் சேர மாட்டோம். மோசக் கருத்தான எண்ணம், பேச்சு, நடை, செய்கை இவைகள்

எப்போதும் எங்கள் மதத்தில் கிடையாது என்று சத்தியமாக எண்ணி அனுஷ்டித்து வாருங்கள். இம்மதத்தின் உண்மைகள் எல்லாவற்றையும் இங்கு கூறிக் கொண்டிருப்பதற்குச் சாவாகாச மில்லாததால் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறேன்.

இந்து மதத்தில் 1500 பிரிவுகள் இருக்கின்றன. அவற்றில் **சைவம், வைஷ்ணவம், காணாபத்தியம், கௌமாரம், சாக்தேயம், காபாலிகம்** என்ற ஆறும் வெகு முக்கியமானவைகள். அதில் சைவத்தில் 140 பிரிவுகளும். வைஷ்ணவத்தில் 85ம் மற்றும் ஒவ்வொரு மதங்களிலும் பல வகைப் பிரிவுகளும், கொள்கைகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அவை யனைத்தும் ஒரு பரம்பொருளையே குறிக்கின்றன. ஒரே உடம்பில் சைவ மத கைகள், வைஷ்ணவ மத சிரசு, கணபதி மத கழுத்து, சுப்பிரமணிய மத நெஞ்சு, சக்தி மதத் துடை, காபாலிக மதப் பாதம். இதுபோல 1500 மதங்களுக்கும் ஒரு உடம்பின் உறுப்புக்களேயாகும். ஒருவன் நுங்கம்பாக்கம் என்கிறான். மற்றொருவன் வண்ணாரப்பேட்டை என்கிறான். இன்னொருவன் மீர்சாகிப்பேட்டை என்கிறான். வேறொருவன் புரசைவாக்கம் என்று பேசுகிறான். எல்லோரையும் ஒன்று சேர்த்து மதறாசா என்றால் ஆமாம் என்கிறார்கள். அதுபோல ஒரு ஹிந்துமதத்துக்குள் அடங்கி யிருக்கப்பட்ட மதங்களும் இதுபோலவே என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

சுமார் 30 வருஷ காலமாக இந்தியா முழுமையும் சுற்றுப் பிரயாணம் செய்து ஹிந்து மதத்தைப் பற்றியும் அதனுள்ளடங்கிய பல விஷயங்களைக் குறித்தும் ஞான யோக, பக்தி யோக, கர்ம யோக மார்க்கங்களையும் ராஜயோக முதலானவைகளையும் உபந்யாச மூலமாக பல பட்டணங்களிலும், சிறு ஊர்களிலும், கிராமங்களிலும், போதித்து வருவது என் வழக்கமா இருந்து வந்திருக்கிறது. இந்தச் சென்னையிலும் அடிக்கடி வந்து மேற் கூறிய விஷயங்களை பல இடங்களிலும் பொது ஜனங்களுக்கு உபநியாச மூலமாய் நூற்றுக்கணக்காகச் செய்யப்பட்டிருக்கிறது. ஆங்காங்கு உபந்யாசம் செய்தவைகளையும் மற்றும் என்னால் செய்யப்பட்ட பல சாஸ்திரங்களையும். நூற்றுக்கணக்காக வேறு வேறு பாகமாகப் பிரித்து அச்சிட்டு வெளியிட்டும் வந்திருக்



கிறது. முக்கியமாக எனது நோக்கம் நமது ஜனங்களிடம் கொண்ட அபிமானமும் இந்துமதத்தையும் அதன் தத்துவத்தை யும் எல்லோரும் அறிந்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத் தினாலும் இவ்விதப் பிரசாரம் செய்து கொண்டு வரப்படுகிறது. தற்போதும் சென்னைக்கு நான் இருக்குமிடத்தில் மாலை ஒரு மணி நேரம் வரை வரப்பட்டவர்களுக்கு உபந்யாசம் செய்யப் பட்டு வருகிறது.

இவ்வூரிலுள்ள முக்கியஸ்தருள் சிலர் என்னிடம் வந்து வானொலியாகிய ரேடியோ மூலம் தாங்கள் இந்துமதத்தின் அருமை பெருமைகளையும் அதன் தத்துவங்களையும், உபந்யாச மூலமாக வெளியிட்டால் எல்லோரும் அறிந்து கொள்ள ஏதுவா யிருக்குமென்று கேட்டுக் கொண்டதால் முதன் முதலாக இந்த விஷயத்ததைப் பற்றி கூற ஆரம்பித்தேன். இனிமேல் முறையே,

1. கடவுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தம்,
2. இந்த உலகத்திலேயே மனிதன் கடவுளை அறிய முடியுமா? அல்லது முடியாதா?
3. எல்லோருக்கும் வேதாந்த ஞானம் புகுத்தி விட்டால் விவகாரம் சரியாய் நடக்குமா?
4. மனிதனின் சக்திக் குறைவு ஏற்படுவதற்கு என்ன காரணம்?
5. ஆத்மாவைப் பற்றி ஒவ்வொருவரும் அறிய வேண்டிய அவசியமென்ன?
6. மனிதனுக்கு வியாதிகள் உண்டாவதற்கு என்ன காரணம்?
7. சுருதி, யுக்தி, அனுபவம் இம்மூன்றில் எது பெரிது?
8. சங்கீதத்தினால் அடையும் பலன் என்ன?
9. மூன்று ஆசைகளில் எது பெரிது?

இவ்விஷயங்களை இந்த ரேடியோ மூலம் எல்லா பொது ஜனங்களுக்கும் தெரியும்படியாக, தெளிவான செந்தமிழ் நடையில் உபந்நியசிக்கலாமென்று தீர்மானித்திருக்கிறேன். இதுவரை இந்து மதத்தின் பெருமை, உயர்வுகளைப் பற்றி உபந்யசித்து வந்ததைப் பார்க்கும்போது பல வருஷங்கள் பேசிப் பேசி முடிவு பெறாத இவ்விஷயத்தைச் சில நிமிஷங்களுக்குள் பேசி முடித்துவிட முடியுமா? சுருக்கமாக எவ்வளவு சொல்ல முடியுமோ அவ்வளவு சொல்லியிருக்கிறேன். மற்றொரு சமயம் வாய்க்கும்போது இதுபற்றி விரிவாகச் சொல்லலாமென்று நினைத்து எங்கும் நிறைந்த கடவுளை நினைத்துக் கொண்டு இத்துடன் இவ் உபந்யாசத்தை நிறுத்திக் கொள்ளுகிறேன்.

-: சுபம் :-

ஓம் தத் ஸத்



தத் ஸத்

## ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ 8-5-1917 ஈரோடு ரயில்வே ஸ்டேஷனில் உபந்நியாசித்த

# பிரஹ்மோபந்நியாஸம்

ஹே ஆத்மாக்களே! இன்று மாலை ரெயில்வே பிளாட் பாரத்தில் நின்று கொண்டு 20 நிமிஷ நேரம் யதார்த்த ஞான விஷயங்களைச் சுருக்கமாய் உங்களுக்குப் போதிக்க ஆரம்பித்திருக்கிறேன். இது இனிது முடியுமாறு அகண்டாகார ஆனந்த சொரூப சைதன்ய வஸ்துவை இப்போதுதான் நினைத்தே னென்று எண்ணாதீர்கள். எப்போதும் நாம் அதுவாக வும், அது நாமாகவும் இருக்கிறோம். அப்படியிருந்தும் நாம் நம்மை ஓர் ஜீவனாகவும் மனுஷ்யனாகவும் ஓர் சாதிக்குள்ளகப் பட்டவனாகவும் ஓர் வருணத்தானாகவும் ஓர் ஆச்சிரமியாகவும் நினைத்து, நம்முடைய யதார்த்த சொரூபத்தை மறந்து ஜன்மப் படுகுழியிலாழ்கிறோம்.

அப்படி நினைப்பதும் ஜன்ம விருத்திக்கு ஓர்வித நன்மை தான், அது உண்மை ஞானத்துக்கு நேர் விரோதமாயி ருக்கிறது, எப்படியெனில் சர்வ தத்துவங்களையும் கடந்த இடத்தில் பிரஹ்ம தரிசனமுண்டாகிறது. அதாவது அத்வைதிகள் கூறுகிறபடி இருபத் தெட்டாவது தத்துவமும், விசிட்டாத்துவைதிகள் கூறும் இருபத்து நாலாவது தத்துவமும், சாங்கியர்கள் கூறுமிருபத்தைந்தாவது தத்துவமும் கடவுளென்கிறார்கள்,

யார் எப்படித் தத்துவக் கணக்கு சொன்ன போதிலும் எப்படியாவது தத்துவங்களைக் கடந்தே தீர வேண்டும், அப்படித் தத்துவங்களைக் கடக்க வேண்டுமானால் ஸ்தூல சரீரத் துளாரோபிதமான வருணாச்சிரமங்கள், அவற்றின் பிரிவுகள்,

அவற்றின் கட்டுப்பாடுகள், இவைகளில் மனம் வைக்காமல் அப்பாலுள்ள தத்துவங்களைத் தள்ளி அப்பாற் செல்ல வேண்டும். அதன் விவரங்களை விவரிக்க இப்பொழுது சமயமில்லாததனால் இன்னொரு தரம் வரும்போது சொல்லுகிறேன்,

பின்னும் வருணாச்சிரம தருமங்கள் எதுவரை அனுஷ்டிக்க வேண்டுமென்றாலோ உண்மை ஞானம் வரும் வரையிலும், துரியானுபவம் வரும் வரையும் அல்லது உலகத்துள்ள ஓர் மதம், ஓர் ஜாதி, ஓரரசன், ஓர் வீடு, ஓர் செல்வம் இன்னு மனேகமாயுள்ள சர்வ பந்தங்களையுங் கடக்கும் வரையும் அல்லது சர்வ இச்சைகளும் விடும் வரையிலும், தன்னுடைய யதார்த்த நிலை தெரியும் வரையும், எங்கும் ஒரே சமபாவனை வரும் வரையும், இருதயத்திலுள்ள துக்கம் நீங்கும் வரையும் அதாவது இருதயம் சுத்தமாகும் வரையும் அனுஷ்டிக்க வேண்டும். அப்பாலும் அனுஷ்டிக்கக் கூடாது.

ஏனெனில் அவனுக்குண்டான ஞானத்தையுங் கெடுத்து விடும். அது எப்படிக் கெடுக்குமென்றால், ஒருவன் ஓர் பாழுங் கிணற்றில் வீழ்ந்து விட்டான். அவன் ஓர் வேரைப் பற்றிக் கொண்டு நிற்கிறான். அப்போது வேறோர் மனிதன் கிணற்றின் மேலிருந்து ஓர் பலமான கயிற்றை விடுகிறான். இக்கயிறு வருகிறதைக் கண்டு மேலேற வேண்டுமென்னும் ஆத்திரத்தினால் வேரைவிட்டு விடுவானாயின் கிணற்றில் வீழ்ந்து விடுவான். பின் அவன் என்ன செய்ய வேண்டுமென்றால் கயிறு தன்னிடம் வரும்வரை வேரைப் பலமாகப் பிடித்திருந்து, கயிறு வந்தவுடன் கயிற்றை ஓர் கையினாற் பலமாகப் பிடித்துக் கொண்டப்பின் வேரை விட வேண்டும். அப்போது மேலிருப்பவன் கயிற்றை மேலிழுக்க இவன் மேலே வந்துவிடுவான்.

இதல்லாமல், இவன் கிணற்றுக்குள்ளிருக்கும் வேரை ஒரு கையிலும், கயிற்றை ஒரு கையிலுத் பிடித்துக் கொண்டிருந்தால் மேலும் வரமாட்டான்; கீழும் போகமாட்டான்; நடுவிலே தயங்குவான். ஆதலால் கயிறு கிடைத்தவுடன் வேரை விட்டுவிட வேண்டும். இதுபோலத் தாஷ்டாந்தத்தில் ஜன்மமென்னுங் குழியிலொருவன் விழுந்து விட்டான், அவன் வருணாச்சிரம தரும மென்னும் வேரைப் பிடித்துக் கொண்டு தொங்குகிறான்.



அப்போது குருவென்னுமொருவர் ஞான மென்னுங் கயிற்றை உள்ளே விடுகிறார், அது வருகிறதென்னும் ஆத்திரத்தினாற் வருணாச்சிரம தருமமென்னும் வேரை விடுவானாயின் ஜன்மக் குழியில் விழுந்து விடுவான். ஆதலால், ஞானமென்னுங் கயிறு வந்தவுடன் பலமாகப் பிடித்துக் கொண்டு, பின் வருணாச்சிரம வேரை விட வேண்டும், ஞானம் வந்ததும் வருணாச்சிரம பந்தி ருக்குமானால் அவன் ஒருநாளுங் கிணற்றிலிருந்து மேலேறப் போகிறதில்லை, இது சுருதி யுக்தி அனுபவம் என்னும் மூன்றிற்குஞ் சம்மதமாம். மோட்டார் வண்டி ஏறுவதற்குப் பணமிருக்க ஏன் கட்டை வண்டியேற வேணும். அதுபோல், ஆத்ம ஞானமடையச் சாமர்த்தியமிருக்க ஏன் வருணாச்சிரம தரும மனுஷ்டிக்க வேண்டும். அப்படி மோட்டார் வண்டியில் போகிற ஒருவனைக் கட்டை வண்டியில் போகிற ஒருவன் ஏன் நீ மோட்டாரில் போகிறாய்; என்னோடு கட்டை வண்டியில்தான் வரவேண்டுமென்றால் அதற்கு என்ன பதில் சொல்லலாம். அதுபோல் ஆத்ம ஞானம் என்னும் மோட்டார் வண்டியிற் போகிற ஒருவனை வருணாச்சிரமக் கட்டை வண்டிக்காரன் என்னுடைய வண்டிக்கு வாவென்றால் நாமதற்கு என்ன செய்யலாம். அவனுக்கு மோட்டாருக்குப் பணமில்லை, அதனால் பணமிருக்கிறவனையுங் கூப்பிடலாமா? கூப்பிடுதல் அவனுடைய புத்தி ஈனமும் வினய சம்பத்தில்லாததினாலுமாகும். ஆனால் அவன் கூப்பிடலாம். கூப்பிட்டப்பின் இவன் என்னிடம் பணமிருக்கிறது எனக்கது தேவையல்லவென்றால் அதையாவது கேட்க வேண்டாமா? பின்னும் இதைப்பற்றியே அதி விரைவாகவும், சுருக்கமாவும், தெளிவாகவும் சொல்லுகிறேன். வருணாச்சிரம தருமம் இன்னு மெதுவரை வேண்டுமெனிலோ அதையும் சொல்லுகிறேன். ஓர் பாதையில் ஓர் மாஞ் செடி வைத்திருக்கிறது அது சிறியதாயிருப்பதால் ஆடு மாடுகள் மேய்ந்து கெடுத்து விடுமென்று மதில் வைக்கிற வழக்கம். அந்த மதில் எதுவரை வேண்டும்? மரம் பெரிதாகும் வரையே. அப்பால் வேண்டியதில்லை.

அதுபோல், ஞானமென்னுமோர் மாஞ்செடி வைத்திருக் கிறது. அதை உலக பாசங்களான மண், பெண், பொன் முதலிய ஏடணாத்திரயங்களென்னும் ஆடு மாடுகள் மேய்ந்து கெடுத்து

விடாதபடி வருணாச்சிரம தருமமென்னும் மதில் வைக்க வேண்டும். ஞான மாஞ்செடி பெரிதான பின் வேண்டுமோ? வேண்டாம். பின் ஞானம் வர ஆரம்பிக்கும் போது கரும காண்டத்தை அனுஷ்டித்தல் கூடாது. ஏனெனில் இருக்கும் ஞானத்தையுங் கெடுத்து விடும். எப்படியெனில், ஞானமோ அந்தர்முக வேலை; கர்மமோ பகிர்முக வேலை. ஞானமோ அபேதம்; கர்மமோ பேதம், ஞானமோ சுகம்; கர்மமோ துக்கம், ஞானமோ அகண்டம்; கர்மமோ கண்டம். ஞானமோ முடிவு; கர்மமோ ஆரம்பம். இன்னும் இதுபோன்ற விஷயங்களிலும் ஞானமே பிரபல சுருதிகளில் மேலாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது என்னுடைய அபிப்பிராயமல்ல. வியாச பகவான் கூறிய பிரஸ்தானத் திரயத்துள் ஒன்றான பிரஹ்ம சூத்ரம் நான்காம் அத்தியாயத்திலும், ஸ்ரீ பகவத்கீதையில் பகவானாலும் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

உய்வகை யோக மொருப்படு வார்க்கது
கைவருமா செயல் காரணமே காண்
மெய்வகை யோகம் விளைந்தபின் மெய்யே
செய்வன வானவை தீமைய வேயாம். (பகவத் கீதை)

பின்னும் பற்பல ஆசாரியர்களாலும் சொல்லப்பட்டிருக் கிறது. அவற்றை இங்கு கூறச் சாவகாசமில்லை. பின்னும் வாயினால் ரொம்ப சாமர்த்தியமாகவும், சர்வ சாஸ்திர சம்பன்னனாகவும் பேசிவிட்டால் ஞானமா? அப்படிச் சாஸ்திரம் படித்ததெல்லாம் இப்போது எனக்கு விரோதமாகத் தெரிகிறது. ஏனெனில், எனக்குச் சாஸ்திரம் தெரியாமற் போனால் ஒருவருடனும் பேசாமல் மனதைச் சமாதியிலேயே யிருத்துவேன். சாஸ்திரந் தெரிந்ததினால் தானே பேச வேண்டி வந்தது. ஆனாலும் உலக உபகாரந்தானே.

ஞானிகளில் மூன்று விதம். அதாவது, உத்தம, மத்திம, அதமமென்னும் மூன்றுவிதப் பிராரத்தமுடைய ஞானிகள். எப்போதுஞ் சமாதியில் இருக்கும் முயற்சியிலேயிருப்பவன் உத்தமன். சமாதி முயற்சியும் உலக உபகாரமுமாயிருப்பவன் மததிமன். வியாபாரம், இராஜ்ய பரிபாலனம், கிருஷி முதலிய காரியங்களைச் செய்பவன் அதமன்.



அதாவது **சுகர், தத்தாத்திரேயர் உத்தவர், இராமகிருஷ்ண பரம ஹம்சர்** முதலியவர்கள் **உத்தமர்கள்**.

**வசிஷ்டர், வியாசர், உத்தாலகர், யாக்ஞவல்கியர், பராசரர், நாரதர், விவேகானந்தர்** முதலியவர்கள் **மத்திமர்கள்**.

**ஜனகமகாராஜா, கிருஷ்ணன், இராமன், இட்சுவாகு, பகீரதன், அருச்சுனன்** முதலியவர்கள் **அதமர்கள்**. ஆனால் எல்லோருக்கும் முக்தி சமமே. ஆத்ம சுகம் மாத்திரம் ஏற்றக் குறைச்சலாக இருக்கும்.

பின்னும் வருணாச்சிரம தருமங்கள் சித்த சுத்திக்கேது வென்று சொல்லலாம். அதாவது, ஐ.சி.எஸ். பாஸ் பண்ணினவர் தான் கலெக்டர் வேலைக்குப் போகலாம். பி.ஏ.பி.எல். பாஸ் பண்ணினவர்தான் ஐக்கோர்ட்டு வக்கீல் வேலைக்குப் போகலாமென்பது போலவும். ஞான அதிகார லக்ஷணங்கள் கூறியபடி யுள்ளவனே ஞானத்துக்கு போகலாமென்று சொல்லலாம். வருணாச்சிரம பேதமிருக்கும் வரை ஒருவருக்கும் ஞானமுண்டாகிறதல்லை. ஞானமுண்டாகாமல் வருணாச்சிரம பேதமும் போகிறதில்லை.

அது எதுபோலெனில். திருச்சிராப்பள்ளிக்கு மெட்ராஸ் மெயில் வரவும், ஈரோடு மெயில் போய்ச் சேரவும் சரியா யிருக்கிறது. அதுபோல் ஞானம் வரவும், வருணாசிரம பேதம் போகவும் சரியாயிருக்கிறது. ஆஸ்ரமங்களாலும் வருணங் களாலும் ஞானம் உண்டாகிறதில்லை. அப்படியிருக்குமானால் எல்லா வருணத்தார்களுக்கும் ஞானமுண்டாகவில்லையே. ஆனால் சந்நியாசம் செய்து கொள்ள வேண்டும். அதனால் ஞானம் வருமென்று சொல்லுகிறார்கள். சந்நியாசமென்றால் தலை மொட்டையடித்துக் காவி பூண்டு ருத்ராக்ஷதாரணஞ் செய்து புறப்படுவதல்ல. மனதினின்று சர்வ இச்சைகளையும் விட்டு நிருவாணியா யிருத்தலாம். ஆதலால் **அதுவே ஞானத்துக்கு நேர் சாதனமாம்**.

**ஞானமில்லாத மனிதர்கள் உலகத்தில் ஒருவருங் கிடை யாது**. ஆத்ம ஞானமென்றால், கோவிலுக்குப் போய் வருதல்,

புஷ்பந் தொடுத்து விக்கிரகங்களுக்குச் சாத்துதல், தீர்த்த யாத்திரை செய்தல் முதலியன அல்ல. பின்னோ, மனதை ஆத்மாவினிடத்தே இருக்கச் செய்வதேயாம். ஆசையை விடாமல் ஒருவரும் ஞானமடைய முடியாது. ஆசையுடன் ஞானமடையலா மென்று சிலர் சொல்லுவார்கள். அவர்கள் கூறுகிறபடி அடையலாம்.

எப்படி யென்றால், இரண்டு எவ்வன ஸ்திரிகள் கூடி புத்திரனுண்டாகுமாகால் ஆசையோடு ஞானமுமுண்டாகும். ஆதலால் ஆசையுள்ளவனுக்கும் ஞானமுண்டாகிறதில்லை. ஞானமுள்ளவனுக்கும் ஆசையுண்டாகிறதில்லை. எப்படி யெனில், அரையணாவுக்கு வாங்குகிற புளித்த மாம்பழந் தின்ற ஒருவன் அதையே பெரிதாக நினைக்கிறான். அவன் இரண்டணா சேலம் மாம்பழந் தின்றபின் அரையணா பழத்திலிச்சை வருகிறதே யில்லை. அதுபோல ஸ்திரீகள் செல்வம் முதலிய அரையணா மாம்பழச் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிற நாம் ஆத்ம ஞானமென்னும் இரண்டனா மாம்பழம் சாப்பிடும்வரை அரையணா மாம்பழமான ஸ்திரீ முதலான இச்சை விடுகிற தில்லை. பின்னும் லண்டன் மாநகரில் இருக்கக்கூடிய 250 கோடி ரூபாய் ஸ்திதியுள்ள ஒரு துரை ஈரோடு பெண்ணை விவாகஞ் செய்வாறா? செய்கிறதில்லை. ஏனெனில், ஜப்பான், ஜெர்மனி, பிரஞ்சு, அமெரிக்கா, இட்டாலி, டர்க்கி, சைனா, பாம்பே, மெட்ராஸ் முதலிய இடங்களிலுள்ள அழகான ஸ்திரீகளையெல்லாம் விட்டுப் பட்டிக்காடான ஈரோட்டில் அதிலும் அழகில்லாத ஏழை வீட்டு பெண்ணை விவாகஞ் செய்கிறதில்லை. அப்படி விவாகஞ் செய்வாரேயானால் அவர் லார்ட்டு துரையுமல்ல.

அதுபோல அநித்திய ஜட துக்கமல பாண்டமான ஸ்திரீ களை ஆத்மஞானி களிச்சிக்கிறதில்லை. இச்சித்தால் ஆத்ம ஞானியுமல்ல. பின்னும் இல்லற ஞானிகள் வருணாச்சிரம தருமங்களை விடாமலனுஷ்டத்தார்களே என்ற சங்கை உங்களுக்குண்டாகலாம். அவர்களக்கு மனதில் வருணாச்சிரம பேதங்களில்லை. ஆனால் அவர்கள் பிராரத்தம் அவர்களை இல்லறத்திலிருக்கும்படி செய்கிறது. ஆனாலும் அவர்கள் மூடத்



தன்மையான உலக மனுஷ்யர்களுக்காகத் தானும் வருணாச்சிரம தருமங்களை அனுஷ்டிக்கிறதாக நமக்குத் தெரிகிறது. அது அவர்களிடத்திலில்லை. எப்படியிருந்தாலும், துறவற ஞானியே பெரிதென்று நான் சொல்வேன். ஏனென்றால் இரண்டு எவ்வன புருஷர்கள் இரண்டு எவ்வன ஸ்திரீகளை விவாகஞ் செய்துக் கொண்டு வந்து இரண்டு ஏழாவது மாடி வீட்டில் வைத்தார்கள். ஒருவன் ஏழாவது மாடியில் மனைவியோடு சுகித்துக் கொண்டி ருக்கிறான். ஒருவன் கீழ் மாடியில் குடும்ப விவகாரம் பண்ணு கிறான். யாருக்கு பெண்சுக மதிகங் கிடைக்கும்? மேல் மாடியி லிருந்தவனுக்கேதான். கீழ் மாடியிலிருந்தவனுக்கு மனைவியின் சுகங் கிடைக்கிறதில்லை. ஆனால் மனைவியென்ற பாத்தியம் இரண்டு பேருக்கும் ஒன்றுதான்.

இதுபோல் இரண்டு அப்பியாசிகள் ஞானமென்னும் ஸ்திரீயை விவாகம் பண்ணி வந்து **சுபேச்சை, விசாரணை, தனுமானசி, சத்துவாபத்தி, அசம்சததி, பதார்த்த பாவனை, துரியம்** என்ற ஏழு மாடி வீடு கட்டி அதில் வைத்தார்கள். ஒருவன் ஏழாவது மாடியில் ஞானப் பெண்ணுடன் சுகிக்கிறான். மற்றொருவன் சாக்கிராவஸ்த்தை என்னுங்கீழ் மாடியில்ட குடும்ப வேலை பார்க்கிறான். யாருக்கு ஞானசுக மதிகங்கிடைக்கும்? மாடி வீட்டிலுள்ளவனுக்கே. கீழ் வீட்டிலுள்ளவனுக்கு ஞான சுகங் கிடைக்கிறதில்லை. ஆனால் ஞான மாத்திர மிருவருக்குஞ் சமம்.

இதில் மேல் மாடி மேலிருந்து சுக்கிறவன் **துறவற ஞானி**. கீழ் மாடியிலிருக்கிறவன் **இல்லற ஞானி**. இக்காரணங் கொண்டே துறவற ஞானி பெரிதென்று சொன்னேன். நான் உங்களுக்கு எவ்வளவு ஞானம் சொன்னாலும் இப்போது தானிருக்கும். பின் போய்விடும். எப்படி என்றால் ஓர் பாசி நிறைந்த குளத்தில் கல்லைப் போட்டால் பாசம் விலகும். கல் உள்ளே போனபின் பாசம் மூடிக் கொள்ளும். அதுபோல மனதென்னுமுங்கள் குளத்தில் அஞ்ஞானமென்னும் பாசி மூடியிருக்கிறது. அதில் நான் ஞான வார்த்தைகளென்ற கல்லைப் போடுகிறேன். இவ்வார்த்தை என்னுங் கல் உள்ளே போனபின் உங்கள் மனமென்னும் ஜலத்தை அஞ்ஞான பாசி

மூடிக் கொள்ளும். ஆனால் அக்குளத்தில் குளி தாமரையைப் போட்டுவிட்டால் சிறிது தினங்களில் பாசியைத் தின்றுவிடும். இதுபோல நீங்களும் உங்கள் மனமென்னும் ஜலத்தின்மீது ஞான மென்னுங் குளி தாமரையை போட்டு விடுங்கள். அது சிறிது காலத்தில் அஞ்ஞான பாசத்தை தின்றுவிடும்.

பின், சர்வ சாஸ்திரங்கள் படித்ததனால் ஞான முண்டாகுமோ என்று ஒருவர் கேட்ட சங்கைக்கு சமாதானஞ் சொல்லுகிறேன்.

ஒருவனுக்கு லண்டன் போக வேண்டுமென்ற ஆவல் கொண்டு பிளான் படிக்கிறான். அதனால் லண்டன் போனதாக ஆகுமோ? ஆகிறதில்லை. பின் அவன் லண்டன் போக வேணு மானால் அதிகமான திரவியம் வேண்டும். ஆதலால் மூன்று ரெயில் சந்திக்கிற இடங்களில் காப்பி ஹோட்டல் வைத்துப் பணம் சம்பாதித்துக் கொண்டு ரெயிலேறிச் சென்னை போய் அங்குள்ள சென்ட்ரல் ஸ்டேஷனில் ரெயிலேறி பம்பாய் சென்று அங்கிருக்கும் ஹார்பர் போய் அங்குள்ள ஸ்டீமரேறி லண்டன் போக வேணும். அதுபோல முத்தியென்ற லண்டனுக்குப் போக வேண்டுமானால் **ஞான வாசிஷ்டம், பிரஹ்ம சூத்ரம், பகவத் கீதை, கடம், முண்டகம், மாண்டூக்யம், தைத்திரியம், பிரகதாரண்யம், சுவேதாஸ்வரம், சாந்தோக்யம், ஜாபாலம், கைவல்யம்** முதலிய உபநிஷத்துக்கள், **ஈஸ்வர கீதை, பிரம்ம கீதை, உத்திர கீதை, சங்கர கீதை, குரு கீதை, சூத கீதை, இராம கீதை, ரிபு கீதை, சிவ கீதை** முதலிய 18 கீதைகளும், இன்னும் மற்றுமுள்ள பற்பல பிரபல சாஸ்திரங்களைப் படித்தால் போதாது. இவைகளெல்லாம் முக்தியென்னும் லண்டனுக்குப் பிளான்களாம். இந்தப் பிளான்களான சாஸ்திரங்களை நன்றாகப் படித்ததனால் முக்திக்குப் போனதகா ஆகிறதில்லை.

ஆதலால் முன் சொன்ன லண்டனுக்குப் போக பணம் சேர்த்ததுபோல முக்தியெனும் லண்டனுக்குப் போக ஏகாக்கிரம் என்ற பணம சேர்க்க வேண்டும். அதற்குச் **சாத்துவீகம், இராஜசம், தாமதம்** என்னும் மூன்று ரெயில் சந்திக்கிற **சுழுமுனை பிரமரந்திரம், சூனியாகாசம்** முதலிய ஜங்ஷன்களில் பிராக்டீஸ் (அப்பியாசம்) என்ற காப்பி ஹோட்டல் வைத்து ஏகாக்கிரம்



என்ற பணம் சேர்க்க வேண்டும். பின் பிளான் பார்த்த இடம் அஞ் ஞானம். குதிரை வண்டியேறுதல் **சகாம கர்மம்**. ஸ்டேஷனில் வந்து இறங்குவது **நிஷ்காம கர்மம்.** ரெயில்வே ஸ்டேஷனில் சித்த சுத்தி, ஸ்டேஷன் மாஸ்டர் குரு. அவர் கொடுத்த டிக்கெட் உபதேசம். நாம் கொடுத்த பணம் ஏகாக்கிரம். ரெயிலேறுதல் சமாதி பழகுதல். திருச்சிறாப்பள்ளி சவிகற்ப சமாதி. மெட்ராஸ் நிருவிகற்ப சமாதி. சென்ட்ரல் ஸ்டேஷன் நனவிற் சுழுத்தி. அதாவது தூங்காமற் தூங்குதல். பம்பாய் சகச நிஷ்டை. லண்டன் முக்தி. இப்படி முக்தியையடைய வேண்டும். சாஸ்திரத்துக்கும் முக்திக்கும் இவ்வளவு தூரமிருக்கிறது.

ஆனால் பிளான் பார்த்த ஒருவன் பிளான் பார்க்காம லொருவன் ஆக இருவரும் ரெயிலேறி மதராசுக்கு போகிறார்கள். சேலம் போனவுடன் இருவருமிறங்கி காப்பி ஹோட்டலுக்கு போனவுடன் முதல் மணி அடித்தத்தைக் கேட்டு பிளான் பார்த்தவன் இன்னுமிரண்டு நிமிஷ நேரமிருக்கிறது என்று தைரியமாய் காப்பிச் சாப்பிடுவான். பிளான் பார்க்காதவன் பயந்து ஓடி வருவான். ஆதலால் பிளான் பார்த்து போகிறது தைரியமிருக்கும். இதுபோல் சாஸ்திரம் பார்த்து ஒருவன் ஞானமடைகிறான். பார்க்காமல் ஒருவன் ஞானமடைகிறான். இருவருக்கும் வித்தியாசமிதுவே.

பின், முதலில் ஒருவர் என்னிடம் ஞானிக்கு பிராரத்தமுண்டா? இல்லையா? வென்றார். இல்லையென்றேன். அதனால் அவருக்கு சந்தேகந் தீரவில்லை. அதற்கு நின்றாக விளங்கும்படி திருஷ்டாந்தங் கூறுகிறேன். அதாவது மழை நன்றாகப் பெய்யும்போது இரண்டு மனிதர்கள் மழையில் நடக்கிறார்கள். அதில் ஒருவன் பலமான குடை பிடித்துக் கொண்டு நடக்கிறான். ஒருவன் குடையின்றி நடக்கிறான். இரண்டு பேர்களுக்கும் மழை பெய்தே தீரும். ஆனால் குடையிருக்கிறவன்மீது மழைபடுகிறதில்லை மழை குடையில் விழுந்து போகிறது. குடையில்லாதவனுக்கு மேலே விழுகிறது. இதுபோல இரண்டு மனிதர்கள் உலக சுகதுக்கமென்னும் மழையில் நடக்கிறார்கள். அதில் ஒருவன் சுபானுபவமென்னுங் குடை பிடித்துக் கொண்டு நடக்கிறான். ஆதலால் அவன்மீது பிராரத்த மழை

விழுகிறதில்லை. ஆனதால் பிராரத்தமில்லையென்றே சொல்ல வேண்டும். பார்ப்பவருக்கு மழை பெய்கிறது போலவே தோன்றும்; ஆனால் அவன் மேல் படுகிறதில்லை. குடையுள்ளவன் ஞானி; குடையில்லாதவன் அஞ்ஞானி. ஞானி பிராரத்தத்துக்கும் அஞ் ஞானி பிராரத்தத்துக்கும் பேதமிதுவாம்.

பின்னும் நாம் நம்மை எப்போதும் தாழ்ந்தவனாகவே நினைத்தல் கூடாது. உயர்ந்தவனாகவே நினைக்க வேண்டும். அதாவது, தூல, சூக்ஷ்ம, காரண, சரீரங்களை நானென் றெண்ணாமல் ஆத்மாவே நாமென்றெண்ண வேண்டும். எல்லா மதங்களையும் ஒன்றாக நினைக்க வேண்டும். ஏனெனில் எல்லா மதங்களும் கடவுளை நோக்கிச் செல்லும் பாதைகளாம் சர்வ மதங்களையுஞ் சாரமாக நினைக்க வேண்டும். எல்லா மதாசாரி யர்களையும் சமமாகப் பார்த்தல் வேண்டும். ஒவ்வொரு மதங் களின் முடிவும் பிரஹ்மமென்றே நினைக்க வேண்டும். ஒரு மதத் திலும் துவேஷம் கூடாது. எப்போதும் எல்லா விஷயங்களிலும் எல்லாரிடத்திலும் சமரசமாகவே இருக்க வேண்டும். இதுவே என்னுடைய அபிப்பிராயம். நாம் எப்போதும் முயற்சியை பெரிதாக நினைக்க வேண்டும்.

முயற்சியினாலேயே எல்லாமுண்டாகிறது. நாமே நம் முடைய முயற்சியினாலேயே இந்திரனாகலாம்; சந்திரனாகலாம்; பிரம்மாவாகலாம்; சிவனாகலாம்; விஷ்ணுவாகலாம்; மாயை யாகலாம்; பிரஹ்மமே யாகலாம்.

அதற்கு என்ன பிரமாணமென்றால்,

முன் நகுஷன் என்னும் ஓரரசன் முயற்சியினால் இந்திரனான். ஹனுமாரும் முயற்சியினாலே பிரம்ம பட்டத்துக் காளானார். அதாவது ஓர் மனிதன் 100 அஸ்வமேத யாகஞ் செய்தால் இந்திரனாகலாம். இந்திரன் 100 இராஜசூய யாகஞ் செய்தால் ருத்தனாகலாம். ருத்ரன் 100 அஸ்வமேதம் செய்தால் பிரம்மாவாகலாம். பிரம்மா 100 நரமேதஞ் செய்தால் விஷ்ணுவாகலாம். **சர்வ மனிதர்களும் தங்கள் சங்கற்ப நாசஞ் செய்தால் பிரஹ்மமாகலாம்**. ஆவதென்றால் புதிதாய் உண்டாவதல்ல. இருந்த இருப்பை யதார்த்த சமாதியிலறிவதாம். புதிதாக உண்டாவது நிலைக்கிறதில்லை.



நான் இப்போது சொன்னது ஒரு மதத்தையும் சேர்ந்ததல்ல. உபநிஷத் வாக்கியங்களாம். நாம் அடைய வேண்டிய வழிகளை நம் முன்னவர்களான மஹரிஷிகளே ஏற்படுத்தியிருக்கின்றனர். அதைத் தற்கால நாகரீக மதஸ்தர்கள் ஏற்பட்டுக் கெடுதியான பாஷ்யம் பண்ணித் தாறுமாறாக நடக்கிறார்கள். ஆதலால் எனக்குச் சநாதன தர்மமே பிரியம். நாம் ஒரு மதத்தையு மனுஷ்டிக்க வேண்டாம். ஏனெனில் அக்கிரந்தங்களில் வாதமும் அந்நியமத கண்டனமுமாயிருப்பதால் அனுபவமான விஷயங் களை மாத்திரஞ் சொல்லக்கூடிய கிரந்தங்களைக் குரு முகமாக விசாரித்து, நித்திய பரமானந்த மோக்ஷ சாம்பிராஜியத்தை அடையக் கடவோம். இப்போது சாவகாசமில்லாததால் இன்னொரு தரம் வரும்போது நன்றாய் உங்களுடைய மனோபீஷ்டப்படி போதிக்கிறேன். இவ்வாறு இந்த உபந்யாசம் முடிந்தது.

ஓம் தத் ஸத்

ஓம்

தத் ஸத்

## ஞானாப்பியாசிகள் யோகாப்பியாசிகள் நடக்க வேண்டிய

# அனுபவ அனுஷ்டான முறைகள்

1. ஏகாந்தமாயும் சந்தடி யில்லாததாயும் பரிசுத்தமா யுள்ள இடத்தில் கீழே தகுந்த ஆஸனமிட்டு அப்பியஸம் செய்ய வேண்டும்.

2. பூமிக்கும் சரீரத்திற்கும் மத்திய ஸ்தானத்தில் யாதொரு ஆஸனமுமில்லாதிருந்தால் அப்பியாஸ சக்தியைப் பூமி ஆகர்ஷித்துக் கொள்ளும்.

3. அப்பியாஸம் ஆரம்பிப்பதற்கு முன் நடந்து கொண்டே நூற்றியெட்டு ஸ்ரீராம நாம ஜெபம் செய்துவிட்டு அப்பால் ஆரம்பிக்க வேண்டும்.

4. வயிறு நிறைய ஆகாரமிருக்கும்போது அப்பியாஸம் ஆரம்பித்தால் சோம்பல், நித்திரை, மயக்கம் முதலியவைகளோடு தமோ குணமும் கலந்து அப்பியாஸத்தைக் கெடுத்து விடும்.

5. எந்தவிதமான ஆகாரங்களும் ஜீரணமாவதற்கு ஒரு ஜாமம் (3 மணி) நேரமாகு மாகையால் அது கழித்தபின் தான் அப்பியாஸத்திற்கு ஆரம்பிக்கலாம்.

6. அதிகப் பசியுடன் ஆரம்பித்தால் ரஜோ குணமும் நிறைந்த வயிறுடன் ஆரம்பித்தால் தமோ குணமும் வர ஆரம்பிக்கும்.



7. உலக லௌகிக தர்ம வாசனைகளோடு அப்பியாஸம் ஆரம்பித்தால் பல பல விஷய எண்ணங்களுடன் ரஜோ குணம் வந்து தடுத்து விடும்.

8. அப்பியாஸம் ஆரம்பிக்கச்சில நிமிஷங்களுக்கு முன் பல மஹாத்மாக்களின் ஞானானுபவ எண்ணங்களோடு ஈஸ்வர நாமோச்சாரணம் செய்து மனதைச் சமாதானத்தில் நிலைக்கச் செய்துக் கொண்டு அப்பியாஸம் ஆரம்பிக்க வேண்டும்.

9. அப்பியாசிக்கும்போது எவ்விதமான தடைகள் வந்தாலும் உடனே திரும்பவும் அப்பியாசிக்க ஆரம்பித்து விடக் கூடாது.

10. உடனே அந்த இடத்தை விட்டு எழுந்திருந்து சில போதனா சங்கல்பங்களோடு ஹிருதயத்தைச் சுவாதீனப்படுத்திக் கொண்டு இருபதடி தூரம் நடந்துக் கொண்டே 'ஓம்' என்ற பிரணவ உச்சரிப்புடன் பின் உட்கார்ந்து அப்பியாசிக்க வேண்டும்.

11. வருகிற தடைகளையெல்லாம் போக்குவதற்கு அதி தேவதை கணேஸ்வரர், ஆகையால் அவரது மூல மந்திரம் பிரணவமானபடியால் அந்த மந்திர உச்சாரணம் அவஸ்ய மாகிறது.

12. சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதைப் பட்டவர்த் தனமாக அப்படியே நம்பிவிடக் கூடாது. நம்முடைய அனுபவம், யுக்தி, சரீர நிலைமை, மனோ நிலைமை, கால நிலைமை இவை களுக்கேற்றவாறு பார்த்து அதன்படி நடக்கவேண்டும்.

13. அப்பியாஸ காலங்களில் நமது மனம் ஓட ஆரம்பிக் குமானால் உடனே அப்பியாசத்தை விட்டு எழுந்திருந்து எந்த விஷய திருஷ்ய இச்சையை முன்னிட்டு மனம் ஓட ஆரம்பித்த தென்பதை நன்றாய் பரிசீலனை செய்து அதன் காரணத்தைக் கண்டுபிடித்து விட வேண்டும்.

14. எந்த காரணத்தால் மனம் ஓட ஆரம்பித்ததோ அதற்கு தகுந்த யுக்தி தந்திரம் இவைகளால் சமாதானப்படுத்தி

மனதை நிலைக்கப் பண்ணி மீண்டும் அப்பியாசிக்க வேண்டும்.

15. 1. தூக்கம் வருதல் 2. அந்தகாரந் தோற்றுதல் 3. சிறிய ஜோதி தோற்றித் தோற்றி மறைதல் 4. வேர்வை உண்டாதல் 5. நடுக்கம் வருதல் 6. சூன்ய புத்தி உண்டாகுதல் 7.பகிர்முகப்படுதல் 8. விபரீத சங்கல்பம் இவைகளுண்டாகு மானால் அப்பியாஸத்திற்குக் கெடுதியாகையால் அதற்குத் தகுந்த பரிகாரங்கள் தனக்குத் தெரிந்தவரை பார்க்க வேண்டும். தன்னால் முடியாதுபோனால் தனக்கு உபதேசித்த ஆசாரியரிடமே கேட்டுத் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

16. பெரிய மஹாத்மாவாயிருந்தாலும் தமக்கு உபதேசிக்காதவரிடம் கேட்டால் அப்பியாஸத் தடை, அவாந்தர யுக்தி, அபூர்வ மயக்கம், பிராந்திஸ்வரூபம் இவைகளுண்டாகி விடுமாதலால் ஒரே குருவினிடமே கேட்க வேண்டும்.

17. உபதேச குருவிடமின்றி வேறு மஹாத்மாக்களிடம் கேட்கக் கூடாதென்று சொன்னால், உபதேசியாத மஹாத்மா குரு ஸ்தானத்திற்கு அருகதையுடைவரல்ல வென்றர்த்தமல்ல ஒரே மார்க்கமாகப் போகட்டு மென்றர்த்தம்.

18. அப்பியாஸம் செய்யாத காலங்களில் தனித்திருந்து அப்பியாஸத்தைப் பற்றித்தன் யுக்தி எட்டுகிறவரை விசாரித்துத் தன் அனுபவத்திற் கேற்றபடி தீர்மானிக்க வேண்டும்.

19. எவ்வளவுக் கெவ்வளவு உலக விவகாரம், குடும்ப காரியம், உத்தியோக வேலை, வியாபார எண்ணம், விவசாய நினைப்பு இவைகளை அவஸ்யமாய் எவ்வளவு அனுஷ்டிக்கலாமோ அனுஷ்டித்து தீர வேண்டுமோ அவ்வளவு மட்டும் முடித்துவிட்டு அதினின்று விலகிவிட வேண்டும்.

20. நமது அபூர்வ குழந்தைகளுக்குப் புதிது புதிதாக அலங்கரித்துப் பார்த்து ஆனந்தப்படுவதுபோல, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அப்பியாஸ யுக்தியை நூதனம் நூதனமாகக் கண்டுபிடித்து அப்பியாசித்து ஆனந்தப்பட வேண்டும்.



21. அப்பியாஸ காலங்களில் தடைகள் வருவதானது பகவானது பரீக்ஷைக்குக் காரணம், நமக்குத் திடஞானத்தைக் கொடுப்பதற்கு ஓர் ஏது அப்பியாஸ முயற்சிக்கு நல்ல காரணம் சீக்கிரம் ஞானோதயமாவதற்குள்ள அறிகுறி என்பதாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

22. முன் ஜென்மத்தில் நாம் மற்ற ஜீவர்களுக்குச் செய்த தீங்குகள் இந்த ஜன்மத்தில் நமக்கு அப்பியாஸத் தடையாய் வருகிறது.

23. முன் ஜன்மாந்திர வாசனைப்படி வரக்கூடிய தடை களை எதிர்த்து நின்று பயப்படாமல் துணிவோடு பரபரப்புடன் அப்பியாஸம் செய்யாமல் சாந்தமாகப் போராடி ஜெயிக்க வேண்டும்.

24. மனத்தின் சுபாவம் இதுகாலம் வரை ஓடி ஓடி பழக்கமானதால் அதை அடக்க ஆரம்பித்தால் அதிகமாக ஓட ஆரம்பிக்கும். அதனால் அதற்குப் பயந்து அலுத்து விடாமல் நிமிர்ந்து நின்று ஈஸ்வரன், குரு, வேதம், அந்தக்கரணம் இந்த நான்கின் காருண்ய பலத்தைக் கொண்டு ஜெயிக்க வேண்டும்.

25. ரஜோ குண, தமோ குண ஆகாரங்கள் அப்பியாஸ மனத்தைத் தடைப்படுத்தி விடுமாதலால் சுத்த சத்துவ குண ஆகாரமே உட்கொள்ள வேண்டும்.

26. அதிகக் காரம், நிறைந்த புளிப்பு, மீறிய உப்பு, அளவு கடந்த மதுரம் இவைகள் வானர புத்தியை உண்டாக்கி விடுமாதலால் அவற்றை நீக்கிவிட்டுச் சமத்துவம் சரீரத்திற்குப் பொருத்தம். ஸ்தூல சூக்ஷ்ம ஆரோக்கியம் இவைகளைத் தருவதும் பயத்தை யுண்டு பண்ணாததுமான ஆகாரங்களை உட் கொள்ள வேண்டும்.

27. பூமி எவ்வளவு சாரமுள்ளதும், விலை யுயர்ந்தது மானாலும், காலத்திற்கேற்ப மேல் மழையும், அடிக்கடி கிடைத்தாலும், மேலான பாதுகாப்பிருந்தாலும், ஆழமாக உழப் படாத பூமியில் அந்த வித்தின் முளை கிளம்பாததுபோல,

நம்முடைய மனமாகிற பூமி எவ்வளவு பரிசுத்தமும் அபார சக்தியுள்ளதாயிருந்த போதிலும் சமதமாதி குணங்களாகிற நீர்ப்பாய்ச்சலும், பகவானது கிருபையாகிற மேல் மழையும், குரு உபதேசமாகிற நல்லவித்தும் நிதித்தியாஸனமென்கிற பாதுகாப்பும் இருந்தாலும் அப்பியாஸ உழவு பலிதமாகாமற் போனால் உபதேச வித்தின் ஞானமுனை புறப்பட மாட்டாது.

*28.* அப்பியாசம் பூர்த்தி பெற வேண்டுமென்றும் வருகிற தடைகள் ஜெயிக்கப்பட வேண்டுமென்றும் தினந்தோறும் சர்வலோக சரண்யராகிய சர்வேஸ்வரனைப் பிரார்த்தித்து வரவேண்டும்.

ஓம் தத் ஸத்

– விலக்ஷணாணனந்தர்

*5030–2–12–14–25*



குறிப்புகள்